# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 ஐப்பசி 12 திங்கட்கிழமை (29-10-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:337


# மூதூரில் ஊரடங்கு!

## தமிழர் - முஸ்லிம்கள் இடையே கலவரம் வெடிக்கும் ஆபத்து!!

திருகோணமலை,ஒக்ரோபர்29

**திருகோணமலை மாவட்டத்தில் மூதூர் பகுதியில் வசிக்கும் தமிழர்கள் மற்றும் முஸ்லிம்களுக்கு இடையே இனக்கலவரம் வெடிக்கக்கூடிய பதற்றமான சூழ்நிலை உருவாகியதை அடுத்து அங்கு நேற்று மாலை 5 மணிமுதல் ஊரடங்கு உத்தரவு அமுல் செய்யப்பட்டிருக்கிறது.**

திருகோணமலையில் இருந்து விசேட பொலீஸ் அணி ஒன்றும் அங்கு அனுப்பப்பட்டு, பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டிருக்கின்றன.

மூதூரில் சனிக்கிழமை இரவு தமிழ் இளைஞர் ஒருவர் தாக்கப்பட்ட சம்பவத்தைத் தொடர்ந்து அங்கு இரு தரப்

(2 ஆம் பக்கம் பார்க்க)

# ஹக்கீம் சென்ற வாகன அணி கம்பளையில் தாக்கப்பட்டது!

## குண்டர் குழு அட்டகாசம்

கொழும்பு,ஒக்.29

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான ரவூப் ஹக்கீமும் அவரது குழுவினரும் பயணஞ்செய்த வாகன அணி நேற்றிரவு 7.30 மணியளவில் கண்டி - கம்பளை வீதியில் வைத்து குண்டர்களால் வழிமறிக்கப்பட்டுத் தாக்கப்பட்டிருக்கிறது.

கம்பளை நகருக்குச் சமீபமாக பிரதான வீதியில் வைத்து வாகன அணியை வழிமறித்த குண்டர்கள், வாகனங்களை அடித்து நொறுக்கி அட்டகாசம் புரிந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. இதனால் மூன்று வாகனங்கள் பலத்த சேதமடைந்தன.

ரவூப் ஹக்கீம், தேசிய ஐக்கிய முன்னணி வேட்பாளர் லைமன் கிரியெல்ல மற்றும் முன்னாள் நாடாளு

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஸ்ரீ.சு.கட்சியின் பிரதித் தலைவர் அனுரா?

கொழும்பு,ஒக்.29

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதித் தலைவர் பதவி முன்னாள் சபாநாயகர் அனுரா பண்டாரநாயக்கவுக்கு வழங்கப்படலாம் என்று கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பேச்சடிபடுகிறது.

எனினும் இது குறித்து இறுதி முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை

(2 ஆம் பக்கம் பார்க்க)

# வரதர் அணியின் உறுப்பினர் கிழக்கில் சுட்டுக் கொலை!

மட்டக்களப்பு,ஒக்.29

வாழைச்சேனை பேய்த்தாளை என்னும் இடத்தில் நேற்றுக்காலை 6.30 மணியளவில் இனந்தெரியாத பிஸ்டல் குழுவினர் நடத்திய தாக்குதலில் ஈ.பி.ஆர்.எல்.எவ் (வரதர் அணி) உறுப்பினர் ஒருவர் உயிரிழந்தார்.

வாழைச்சேனையில் உள்ள அலுவலகத்தில் இருந்து மற்றொரு உறுப்பினருடன் பேய்த்தாளை நோக்கிச் சென்று கொண்டிருந்த சுந்தரமூர்த்தி ஜீவானந்தமூர்த்தி (வயது - 26) எனபவர்மீதே வீதியில் வந்த இரு இளைஞர்கள் பிஸ்டலால் சுட்டுவிட்டுத் தப்பிச் சென்று விட்டதாகக் கூறப்படுகி

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் துண்டுப்பிரசுரம்

வவனியா,ஒக்.29

'தமிழ்த் தேசிய விழிப்புக்குழு' என்ற பெயரில் அச்சிடப்பட்ட துண்டுப் பிரசுரங்கள் நேற்று வவுனியா மாவட்டத்தின் பல பகுதிகளிலும் விநியோகிக்கப்பட்டிருக்கின்றன.

அமைச்சரும் ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தாவின் வவுனியா விஜயத்தை விமர்சித்து இந்தப் பிரசுரங்கள் வெளியிடப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.(ஐ-164)

# தேர்தல் வாக்களிப்புக்கு முன் தாக்குதலுக்கு புலிகள் தயார்?

## ஆயத்தங்கள் நடப்பதாக ஆய்வாளர்கள் சந்தேகம்

கொழும்பு,ஒக்ரோபர்29

**பொதுத் தேர்தலின் வாக்களிப்பு தினமான டிசெம்பர் 5 ஆம் திகதிக்கு முன்னர், வடக்கு - கிழக்கு யுத்தமுனையில் பெரும் தாக்குதல் ஒன்றுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தயாராகி வருகின்றனரா?**

**ஆயுத தளபாடங்களைப் புலிகள் குவிப்பது இத்தகைய தாக்குதலுக்குப் புலிகள் தயாராவதையே காட்டுவதாக இராணுவ ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.**

பிரபல இராணுவ விமர்சகர் இக்பால் அத்தாஸ் உட்பட பல இராணுவ ஆய்வாளர்கள் இக்கருத்தை வெளியிட்டிருக்கின்றனர்.

கிழக்கு கடல் வழியாகப் புலிகள் தொடர்ந்து ஆயுதங்கள் மற்றும் இராணுவத் தளபாடங்களைக் கொண்டு வந்து குவிக்கும் முயற்சியில் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

கிழக்குக் கடலில் புலிகளின் ஆயுதக் கடத்தலை முறியடிப்பதற்காக கடற்படை வகுத்துள்ள 'வருண கிரண' கடல் முற்றுகை அவர்களது முயற்சிகளைத் தடுத்துவிடவில்லை என்று கூறப்படுகின்றது.

கடந்த திங்கள் இரவு கூட இத்தகைய முயற்சியில் புலிகள் ஈடுபட்டிருந்திருக்கின்றார்கள்.

வரவிருக்கும் வட-கிழக்கு பருவமழை கடற்புலிகளைப் பொறுத்தவரை ஆயுத மற்றும் தளபாடக் கடத்தலுக்கு மிகவும் வாய்ப்பான காலமாகும். இக காலத்தில் கடற் கொந்தளிப்பு, கடும் மழை ஆகியவற்றுக்கு மத்தியில் ஊடுருவிப் பாயும் கடற்புலிகளின் படகுகளைத் தடுத்து நிறுத்துவது என்பது கடல் முற்றுகை வியூகத்தை வகுத்து இருக்கும் கடற்படையினருக்கு இலகுவான காரியம் அல்ல.

நியமனம் பத்திரம் தாக்கல் செய்ததோடு தற்போது ஆரம்பித்திருப்பது தேர்தல் பிரசார யுத்தம் மாத்திரம் அல்ல. அதைத் தொடர்ந்து நிஜயுத்தமும் தீவிரமாகலாம்.

தேர்ந்தெடுக்கப்படவிருக்கும் புதிய அரசுடன் பேரம் பேசும் தமது வலுவை அதிகரிக்கச் செய்வதற்காக பொதுத தேர்தலுக்கு முன்னர் பெரும் தாக்குதல் நடவடிக்கை ஒன்றைப் புலிகள் ஆரம்பிக்கக் கூடும் என பாதுகாப்பு வட்டாரங்கள் கருதுவதால் அவை உஷார் நிலையில் உள்ளன. தேர்தல் காலத்தில் இத்தகைய நெருக்கடி எதனையும் எதிர்கொள்வதற்குப்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# குழந்தை உட்பட 4 முஸ்லிம்கள் மட்டக்களப்பில் சூட்டுக்குப் பலி!

## புலிகளின் ஆதரவாளர்கள் என்கிறது இராணுவம்

மட்டக்களப்பு,ஒக்.29

மட்டக்களப்பில் ஓட்டமாவடிப் பகுதியில் நாவலடி என்னும் இடத்தில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற சம்பவம் ஒன்றில் ஒரே குடும்பத்தைச சேர்ந்த மூவர் உட்பட நான்கு முஸ்லிம்கள் உயிரிழந்தனர்.

நாவலடிப்பகுதியில் உள்ள வீடு ஒன்றுக்கு அருகே காணப்பட்டதாகத தெரிவித்து இந்த நால்வரின் சடலங்களையும் படையினர் வாழைச்சேனை ஆஸ்பத்திரியில் நேற்று ஒப்படைத்திருக்கின்றனர்.

முதல்நாள் இரவு அந்தப் பகுதியில் படையினர் மேற்கொண்ட தாக்குதலில் இந்த சிவிலியன்கள் நால்வரும் பலியாகியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கணவன், மனைவி அவர்களுடைய இரண்டு வயதுக்குழந்தை மற்றும் 64 வயதான வயோதிபர் ஆகிய நால்வரே இச்சம்பவத்தில் உயிரிழந்துள்ளனர்.

(2 ஆம் பக்கம் பார்க்க)

## ஹக்கீமின் பாதுகாப்பை அதிகரிக்குக!

கொழும்பு,ஒக்.29

முன்னாள் அமைச்சர் ரவூப் ஹக்கமுக்கு தற்போது வழங்கப்பட்டுவரும் பொலீஸ் பாதுகாப்பு போதுமானதல்ல என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

ஹக்கீமுக்கு தற்போது ஐந்து பொலீஸார் மட்டுமே பாதுகாப்பு வழங்கி வருகின்றனர். இந்த எண்ணிக்கை அதிகரிக்கப்பட வேண்டும் என்று முஸ்லிம் காங்கிரஸ் பொலீஸ் மா அதிபரிடம் கேட்டிருக்கிறது. (ஐ)

# பயண அனுமதி பெறும் நடைமுறை ஓரிரு தினங்களில் நீக்கப்படும்!

## ஈ.பி.டி.பி. அமைப்பாளர் தகவல்

யாழ்ப்பாணம்,ஒக்.29

குடாநாட்டில் இருந்தும், வவுனியாவில் இருந்தும் வெளி மாவட்டங்களுக்குச் செல்வோர் பாதுகாப்பு அனுமதி பெறும் நடைமுறை இன்னும் ஓரிருதினங்களில் நீக்கப்பட்டுவிடும்.

ஈ.பி.டி.பி. அமைப்பின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கே.வி. குகேந்திரன் இத்தகவலை உதயனுக்குத் தெரிவித்தார்.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சந்திரானந்த டி சில்வா மற்றும் படை அதிகாரிகளுடன் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தொடர்பு கொண்டு பேசி மக்களின் சிரமங்களை சுட்டிக் காட்டியதை அடுத்து பயணப் பாதுகாப்பு அனுமதிபெறும் தற்போதைய நடைமுறையை நீக்கி விட இணக்கம் காணப்பட்டிருப்பதாகவும் -

அடுத்த மாதம் முதல் இந்த நடைமுறை நீக்கப்பட்டுவிடும் என்றும் -

அவர் மேலும் தெரிவித்தார்.

பாதுகாப்பு அனுமதி பெறும் நடைமுறை நீக்கப்பட்டால் யாழ்.மாவட்டத்தில் இருந்து வெளியே சென்று வரும் பயணிகளின் எண்ணிக்கை பலமடங்கு அதிகரிக்க வாய்ப்பு இருப்பதால் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் வழித்துணையுடன் தற்போது இடம்பெறும் பயணிகள் கப்பல் சேவைக்கு மேலதிகமாக மற்றொரு கப்பல் சேவையை ஆரம்பிப்பது குறித்தும் வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ் விவகார அமைச்சு ஆலோசித்துவருவதாகவும் கே.வி.குகேந்திரன் மேலும் தெரிவித்தார்.

(ஐ-180)

# தேர்தல் காலப் பாதுகாப்பு; பொலீஸ் மா அதிபர் ஆராய்வு!

## பல மாவட்டங்களுக்கும் அவர் நேரில் விஜயம்

கொழும்பு,ஒக்.29

தேர்தல் காலப் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து நேரில் ஆராய்வதற்காக பொலீஸ் மா அதிபர் லக்கி கொடித்துவக்கு நேற்று கண்டி, பொலநறுவை, அநுராதபுரம் ஆகிய மூன்று மாவட்டங்களுக்கும் விஜயம் செய்தார்.

பாதுகாப்பு ஏற்பாடுகள் மற்றும் வாக்களிப்புத் தினத்தன்று சட்டம், ஒழுங்கைப் பேணுவது தொடர்பாக அவர் பொலீஸ் அதிகாரிகளுடன் ஆலோச

(12 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# தமிழ் மக்களின் உரிமைகள் கிடைக்க

# மு. காங்கிரஸ் ஒத்துழைப்பு நல்கும்!

## அக்கட்சியின் யாழ். வேட்பாளர் கூறுகிறார்

யாழ்ப்பாணம்,ஒக்.29

தமிழ் மக்களின் சுயாதிபத்தியதை வென்றெடுக்க தமிழர் பிரதிநிதிகளுடன் முஸ்லிம் காங்கிரஸ் பேச்சு நடத்தி எத்தகைய ஒத்துழைப்பையும் வழங்கத் தயாராக உள்ளது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் யாழ். மாவட்ட வேட்பாளர் எம்.ஏ.சி.இக்பால் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ் கஸ்தூரியார் வீதியில் உள்ள விடுதி ஒன்றில் நேற்று முஸ்லிம் காங்கிரஸ் நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கு - கிழக்கில் தமிழ் மக்களுடன் முஸ்லிம்கள் இணைந்து வாழ வேண்டும். தமிழ் மக்களின் உரிமைகளுக்குள் முஸ்லிம்களின் உரிமைகள் உள்ளடக்கியதாக இருக்க வேண்டுமென்பதே எமது செயற்றிட்டமாகும்.

வடக்கு - கிழக்கு முஸ்லிம்கள் தமிழ் மக்களுடன் மிகவும் நெருக்கமாக வாழ்ந்து வந்துள்ளனர். இனி மேலும் அவர்கள் அப்படியே வாழ வேண்டும்.

தமிழ் மக்கள் அங்கீகரிக்கும் கட்சிகளுடன் நாம் பேச்சுக்கள் நடத்துவோம். புலிகளுடன் பேசும் சந்தர்ப்பம் எமக்கு இதுவரை கிடைக்கவில்லை. அவ்வாறு சந்தர்ப்பம் கிடைக்குமாயின் தமிழ் - முஸ்லிம் ஐக்கியத்தைக் கட்டியெழுப்புவோம். வடக்கு - கிழக்கு முஸ்லிம்கள் அந்தந்தப் பிரதேசங்களில் வாழ்வதற்கு உரிமை இருக்க வேண்டும். எனினும் முஸ்லிம்கள் செறிந்து வாழும் பகுதியில் ஒரு தனி அலகு ஏற்படுத்தப்பட வேண்டும். இதனை தென்கிழக்கு அலகாகவும் எடுத்துக்கொள்ளலாம்.

இது தொடர்பான பேச்சுகளின் போது விட்டுக்கொடுக்க நேரிடின் விட்டுக் கொடுக்கவும் தயாராகவுள்ளோம்.

புலிகள் உத்தரவாதம் அளித்தால் தான் யாழ்ப்பாணத்தில் முஸ்லிம் மக்களை மீளக் குடியமர்த்த நடவடிக்கை எடுப்போம். இது தொடர்பாக புலிகளுடன் பேச முயற்சி எடுத்த போதும் இதுவரை அதற்குப் பயன் கிட்டவில்லை.

தமிழர்களும் முஸ்லிம்களும் ஐக்கியப்பட வேண்டும். அவர்களுக்கு கெதிரான அடக்குமுறை ஒழிக்கப்பட வேண்டும். பேரினவாதிகளிடமிருந்து தமிழ், முஸ்லிம் மக்களுக்கு விடுதலை கிடைக்க வேண்டும்.

யாழ்ப்பாணத்தில் முஸ்லிம்களை மீளக் குடியமர்த்துவது தொடர்பாக தமிழ்க் கட்சிகள் இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஈ.பி.டி.பி.மட்டும் எம்முடன் இது தொடர்பாகத் தொடர்பு கொண்டது. தமிழ் மக்கள் மத்தியில் பிரசாரம் செய்து முஸ்லிம்களை ஐக்கியப்படுத்தி அவர்களை இங்கு மீளக் குடியமர்த்தி இப் பகுதியின் விடுதலைக்காக உழைப்பதே எமது நோக்கமாகும்.

தமிழ் மக்களின் உரிமைக்காகவும நாம் போராடுவோம். ஏனெனில் தமிழ் மக்களின் பிரச்சினை தீர்ந்தால்தான் முஸ்லிம் மக்களின் பிரச்சினையும் தீரும்.

வடக்கு - கிழக்கில் உள்ள தமிழ் அரசியல் கட்சிகளும் தென்பகுதியில் உள்ள சிங்களக் கட்சிகளும் அந்தந்தப் பிரதேசத்தில் வாழும் முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கத் தவறிவிட்டன. முஸ்லிம் மக்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக அனைத்து முஸ்லிம்களை ஐக்கிப்படுத்தி அமரர் அஷ்ரப்பால் ஆரம்பிக்கப்பட்டதே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகும் - என்றார் இக்பால்.

முஸ்லிம் காங்கிரஸின் யாழ். மாவட்ட வேட்பாளர் எம்முபின் அங்கு உரையாற்றுகையில் -

யாழ் மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் பட்டியலில் இணைநது போட்டியிட அதன் முதன்மை வேட்பாளர்களிடம் அனுமதி கோரி இருந்தோம். ஆனால் அதற்கு அவர் சம்மதிக்கவில்லை - என்று தெரிவித்தார்.

(ஐ-118-173)

## நவீன சந்தை நுழைவாயில்களை விடுமுறை நாள்களில் திறந்துவிடுக!

### புளொட் உறுப்பினர் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஒக்.29

யாழ்.நவீன சந்தை வியாபாரிகளினதும், பொதுமக்களினதும் நன்மை கருதி பௌர்ணமி மற்றும் ஞாயிறு விடுமுறை தினங்களில் நவீனசந்தைக் கட்டடத்தின் நுழைவாயில்களைத் திறந்துவைக்கவேண்டும்.

புளொட் அமைப்பைச் சேர்ந்த யாழ் மாநகரசபை உறுப்பினர் எஸ்.ஜெயச்சந்திரன் இவ்வாறு யாழ்மாநகர ஆணையாளரிடம் கேட்டிருக்கிறார்.

இது தொடர்பாக ஆணையாளருக்கு அவர் அனுப்பிய கடிதத்தில -

புடைவை வியாபாரிகள் பண்டிகைக் காலங்களிலேதான் வருமானத் தைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் தொழில்களைச் செய்ய முடியும். யாழ் நகரில் அநேகமான புடைவை நிலையங்கள் நவீன சந்தைக் கட்டடத்திலேயே உள்ளன. விடுமுறைத் தினங்களில் நுழைவாயில்கள் பூட்டப்படுவதால் வியாபாரிகள் பாதிக்கப்படுவதோடு பொதுமக்களும் பாதிப் படைகின்றனர். எனவே எதிர்வரும் தீபாவளிப் பண்டிகையினை முன்னிட்டு வியாபாரிகள் தமது வியாபாரத்தினை மேற்கொள்ள ஏதுவாக நுழைவாயில்களைத் திறந்து விடுமாறு கேட்டுக் கொள்கின்றோம். இது தொடர்பாக முதல்வரின் கவனத்துக்கும் இவ்விடயத்தினைத் தெரிவிக்கின்றோம் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)




இலங்கை வங்கி மானிப்பாய்க் கிளையில் 'ரன் சுரக்கும் நய சேவா' எனப்படும் தங்க நகை அடகு சேவையின் அறிமுக வைபவத்தில் கலந்துகொண்ட யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் து.வைத்திலிங்கம் உரையாற்றுவதைப் படத்தில் காணலாம். அருகில் இலங்கை வங்கி வடபிராந்திய உதவிப் பொதுமுகாமையாளர்-திருமதி க.துரைராசா, செயற்பாட்டு முகாமையாளர் க.பாலசுப்பிரமணியம், பிரதேச முகாமையாளர் சி.நடராசலிங்கம் ஆகியோர் அமர்ந்துள்ளனர். (ஐ -100)

*(படம்: நவாலி செய்தியாளர்)*

## பயங்கரவாதத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டது தென்னாசியாவே!

### பிரிட்டிஷ் அமைச்சரிடம் ஜனாதிபதி தெரிவிப்பு

லண்டன்,ஒக்.29

உலகில் பயங்கரவாதத்தால் மிகவும் பாதிக்கப்பட்டிருப்பது தென்னாசியப் பிராந்தியமே.

- இவ்வாறு தெரிவித்திருக்கிறார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

லண்டனுக்கு விஜயம் செய்துள்ள ஜனாதிபதி, நேற்று மாலை பிரிட்டிஷ் உள்துறை அமைச்சர் டேவிற் பிளாங்கற்றைச் சந்தித்து உரையாடிய சமயம் அவர் இதனைத் தெரிவித்தார்.

தெற்காசியா கடந்த 20 வருடகாலமாகப் பயங்கரவாதத்தால் துன்பமடைந்து கொண்டிருக்கிறது. ஆனால் லண்டன் அதனைக்கண்டு கொள்ளாது தவறிவிட்டது. உலகத்திலேயே தெற்காசியப் பிராந்தியம்தான், பயங்கரவாதத்தால் அதிகமாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

நாங்கள் பல பயங்கரவாத இயக்கங்களைச் சந்தித்திருக்கின்றோம். கடந்த 20 வருடகாலமாக மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளோம். இப்போது இந்தப் பிரச்சினை மேற்கு உலகுக்கும் பரவி உள்ளதால் -அதாவது பணக்கார நாடுகளுக்கும் பரவி உள்ளதால் - உலகம் பயங்கரவாதப் பிரச்சினைகளில் கவனம் செலுத்துகிறது. இதனால் நாம் மிகவும் மகிழ்ச்சியாக உள்ளோம் - என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

(ஐ-6)

### மண்ணெண்ணெய் அருந்திய சிறுவன்

யாழ்ப்பாணம்,ஒக்.29

மண்ணெண்ணெய் அருந்திய சிறுவன் ஒருவன் மயங்கிய நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளான்.

நேற்றுப் பிற்பகல் வட்டுக்கோட்டைப் பகுதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் கேதீஸ்வரன் மோகனரூபன் (வயது 3) என்ற சிறுவனே மண்ணெண்ணெய் அருந்தி மயக்கமுற்றான். (ஐ-4)

### ஸ்ரீ.சு.கட்சியின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று பிரதி அமைச்சர் ஒருவர் தெரிவித்திருக்கிறார்.

சுதந்திரக் கட்சியின் கம்பஹா மாவட்ட அமைப்பாளராக இருக்கும் அனுரா, இந்த முறை தேர்தலில் தனக்கு 3 லட்சம் விருப்பு வாக்குகள் கிடைக்கும் என்று மாவட்ட உறுப்பினர்களிடம் தெரிவித்திருக்கிறார். (ஐ)

### மூதூரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாரிடையேயும் ஏற்பட்ட மோதல்கள் மேலும் பரவலாம் என்று எதிர்பார்க்கப்படுவதை அடுத்தே நேற்று இரவு அங்கு ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டது.

சாமித்தம்பி நித்தியானந்தம் (வயது 24) என்ற இளைஞர் சனிக்கிழமை இரவு மூதூர் நகரில் வைத்து இனந்தெரியாதோரால் கத்தியால் வெட்டிக் காயப்படுத்தப்பட்டார்.

இதனையடுத்து மூதூரில் மற்றொரு பகுதியில் வைத்து முஹமது முஜீம் என்ற முஸ்லிம் இளைஞர் கத்தியால் வெட்டப்பட்டதில் உயிரிழந்தார்.

இந்த இரு சம்பவங்களின் எதிரொலியாக அங்கு தமிழர்களிடையேயும் முஸ்லிம்களிடையேயும் பெரும் முறுகல் நிலை உருவானது.

நேற்று மீண்டும் மூதூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு அருகில்வைத்து ஈஸ்வரவாசும் ரமேஸ் குமார் என்ற தமிழ் இளைஞர், முஸ்லிம்கள் எனச் சந்தேகிக்கப்படுவோரால் கடுமையாகத் தாக்கப்பட்டதில் படுகாயமடைந்தார். இதனால் அங்கு இரு சமூகத்தினரிடையேயும் முறுகல் நிலை மேலும் வலுத்துள்ளது.

இனக்கலவரம் வெடிக்கும் நிலை தோன்றலாம் என அஞ்சி மூதூர் நகரில் வசிக்கும் பல தமிழ்க் குடும்பங்கள் நேற்றுத் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறி அங்குள்ள மெதடிஸ்த தேவாலயம், அந்தோனியார் ஆலயம் ஆகிய இடங்களில் சென்று தஞ்சமடைந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மூதூரில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பாக தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் இ. சம்பந்தனும் மூதூர் பிரதேச ஈ.பி.டி.பி. அமைப்பாளரும் பொலீஸார் மற்றும் அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு தேவையான பாதுகாப்பு முன்னேற்பாடுகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொண்டனர்.

இதனையடுத்து 50 பேர் அடங்கிய விசேட பொலீஸ் குழு ஒன்று நேற்று மூதூருக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. (ஐ-3-6)

### கிணற்றில் மூழ்கி சிறுவன் மரணம்

யாழ்ப்பாணம்,ஒக்.29

மதியவேளை சாப்பாட்டை முடித்துக்கொண்டு விளையாடச் சென்ற சிறுவன் அப்பகுதி வயற்கிணறு ஒன்றில் இருந்து சடலமாக மீட்கப் பட்டான்.

அராலி தெற்கில் நேற்று இடம் பெற்ற இச்சம்பவத்தில், அவ்விடத்தைச் சேர்ந்த கருணாகரன் அஜந்தன் (வயது 6) என்ற சிறுவனே உயிரிழந்தான்.

யாழ்.ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்ட சடலம், நேற்று இடம்பெற்ற மரண விசாரணையை அடுத்து தாயாரிடம் கையளிக்கப்பட்டது.

(ஐ-15)

### விழிப்புணர்வு கருத்தரங்கு

கோப்பாய்,ஒக்.29

கோப்பாய் மத்தி - வடக்கு கிராம முன்னேற்ற மாதர் அபிவிருத்திச் சங்க ஏற்பாட்டில் விழிப்புணர்வுக் கருத்தரங்கு இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கோப்பாய்ப் பிரதேச செயலக நேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் 'தியானமும் யோகமும்' என்னும் தலைப்பில் யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட உளநல மருத்துவ பேராசிரியர் தயா சோமசுந்தரம் கருத்துரை வழங்குவார்.

(ஐ-72)

### சாயி சமித்தியில் ஆன்மீக நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஒக்.29

பகவான் ஸ்ரீ சத்ய சாயி சேவா நிலையத்தில் நாளைமறுதினம் புதன் கிழமை காலை 9 மணி முதல் போயா தின ஆன்மீக நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

காயத்திரி மந்திர ஜெபம், பண்ணிசை, பஜனை, சிறப்புச்சொற்பொழிவு என்பன இடம்பெறும். நண்பகல் நாராயண சேவையும் நடைபெறும்.



அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் ஏற்பாட்டில் நேற்று நடத்தப்பட்ட செய்தியாளர் மாநாட்டில் எடுக்கப்பட்ட படம் இது. கட்சியின் தலைவர் அப்பாத்துரை விநாயகமூர்த்தியுடன் யாழ்.மாவட்ட வேட்பாளர்களான சி.வி.கே.சிவஞானம், அமரர் குமார் பொன்னம்பலத்தின் புதல்வரான ஜி.ஜி.கஜேந்திரகுமார் ஆகியோரை படத்தில் காணலாம். (விவரமான செய்தி 5 ஆம் பக்கத்தில்) (ஐ)

## வீதி ஒழுங்கைப் பேணுமாறு பொலீஸ் அதிகாரி அறிவுறுத்து

வலி.கிழக்கு,ஒக்.29

சைக்கிள்களிலும், மோட்டார் சைக்கிள்களிலும் செல்வோர், வீதிப் போக்குவரத்து ஒழுங்குகளை அசட்டை செய்வது அவதானிக்கப்பட்டுள்ளது. இதனால் பாதசாரிகளுக்கும் ஏனைய பயணிகளுக்கும் இடைஞ்சல்களும் ஆபத்துக்களும் ஏற்படுகின்றன. எனவே வீதிப் போக்குவரத்து ஒழுங்கு விதிமுறைகளைக் கடைப்பிடித்து நடக்குமாறு கோருகின்றோம்.

- இவ்வாறு தெரிவித்திருக்கின்றார் கோப்பாய் பொலீஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி எஸ்.ஐ.ஜெயசேன.

அவர் மேலும் கூறியதாவது:-

பிரதான வீதிகள், ஒழுங்கைகள் என்ற வேறுபாடு இன்றி எல்லா வீதிகளிலும் சைக்கிள், மோட்டார் சைக்கிள்களில் செல்வோர் பக்கம்பக்கமாகக் கதைத்துக் கொண்டும் வீதியை முழுமையாக அடைத்துக் கொண்டும் செல்வது வழக்கமாகிவிட்டது. இதனால் வீதியில் செல்லும் ஏனைய வாகனங்களின போககுவரத்திற்குப் பெரும் சிரமங்கள் ஏற்படுகின்றன. இதனால் விபத்துக்களும் ஏற்பட வாய்ப்பு உள்ளது. வீதிகளில் கூட்டாகச் சைக்கிள்களில் செல்வோரில அநேகமானோர் மாணவ, மாணவியர்களே. இவர்களுக்குப் பாடசாலை ரீதியாக வீதிப்போக்குவரத்துப் பிரிவினரால் வீதி ஒழுங்கு தொடர்பாக வகுப்புகள் நடத்தப்பட்டுள்ளன. ஆனாலும் அவர்கள் அந்த விதிமுறைகளைக் கடைப்பிடிப்பது இல்லை - என்றும் அவர் தெரிவித்தார்.

சகலரும் வீதிப்போக்குவரத்து விதிமுறைகளைக் கடைப்பிடிக்க முன்வருமாறும் அவர் கேட்டுக் கொண்டார்.

(ஐ-180)

### குழந்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை -

நாவலடிப் பகுதியில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்கு அருகே சனிக்கிழமை இரவு சந்தேகத்துக்கு இடமான நபர்களின் நடமாட்டம் தென்பட்டதை அடுத்து படையினர் அவர்கள் மீது தாக்குதல் நடத்தியதாகவும் -

மறுநாள்காலை படையினர் அந்தப் பகுதியில் தேடுதல் நடத்திய போது நான்கு சடலங்கள் மீட்கப்பட்டதாகவும் -

கொல்லப்பட்ட நால்வரும் விடுதலைப் புலிகளின் அனுதாபிகளாக இருக்கலாம் எனப் படையினர் சந்தேகிப்பதாகவும் -

விசேட ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்தது. (ஐ-6)

# பாகிஸ்தானியத் தேவாலயத்தில் 15கிறிஸ்தவர்கள் சுட்டுக்கொலை

இஸ்லாமாபாத்,ஒக்.29

பாகிஸ்தான் தேவாலயம் ஒன்றில் நேற்று பிரார்த்தனையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த 15 கிறிஸ்தவர்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

பகவல்பூர் நகரில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

நேற்று ஞாயிற்றுக்கிழமை தேவாலயத்தில் விசேட ஆராதனை வழிபாடுகளில் அப்பகுதியில் உள்ள கிறிஸ்தவர்கள் கலந்துகொண்டனர்.

ஆராதனை நடைபெற்றுக்கொண்டிருந்த சமயத்தில், அடையாளம் தெரியாத சிலர் தேவாலயத்துக்குள் நுழைந்து கண்மூடித்தனமாகச் சுட்டனர். இதில் பிரார்த்தனையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த 15 கிறிஸ்தவர்கள் உயிரிழந்தனர்.

உலக அரங்கில்

ஆப்கானிஸ்தான் மீது அமெரிக்கா நடத்திவரும் தாக்குதல் நடவடிக்கைகளுக்கு பாகிஸ்தானிய இராணுவ ஆட்சியாளர்கள் ஆதரவளித்துவரும் அதேசமயம், தீவிர இஸ்லாமிய மதவாதிகள் அமெரிக்காவைக் கண்டித்து போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஆப்கானிஸ்தான் மீது அமெரிக்கா நடத்தும் தாக்குதலை இஸ்லாமியர் மீது கிறிஸ்தவர் தொடுத்துள்ள போராகவே அவர்கள் கருதுகின்றனர்.

இந்தநிலையில், தேவாலயத்தில் இடம்பெற்ற இந்தத் தாக்குதலின் பின்னணியில் தீவிர இஸ்லாமிய மதவாதிகள் இருக்கலாம் என்று சந்தேகம் எழுப்பப்பட்டுள்ளது. (ஒ)

# பாக். தளபதி உட்பட 20 பேரை வடக்குக் கூட்டணி பிடித்தது!

## 80 தலிபான்கள் கொல்லப்பட்டனர்

இஸ்லாமாபாத்,ஒக்.29

ஆப்கானிஸ்தானில் மாஷா - ஏ - ஷெரீப் நகருக்கு அண்மையில் தலிபான்களுடன் இடம்பெற்ற மோதலில் 80 தலிபான் வீரர்களைக் கொன்றதாகவும் - பாகிஸ்தானியத் தளபதி ஒருவர் உட்பட 20 பேரைக் கைதுசெய்திருப்பதாகவும் - வடக்குக் கூட்டணித் தளபதி ஜெனரல் அப்துல் ரஸீத் தோஸ்தம் தெரிவித்தார்.

இஸ்லாமாபாத்திலுள்ள தனியார் தொலைக்காட்சிச் சேவை ஒன்றுக்கு செயற்கைக்கோள் தொலைபேசி மூலம் அளித்த பேட்டியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

வடக்கு ஆப்கானில் கடந்த மூன்று தினங்களாக இடம்பெற்ற மோதல்களில் வடக்குக் கூட்டணிப் படைகள் பெரிய அளவில் வெற்றி கண்டிருப்பதாக தோஸ்தம் அப்போது கூறினார்.

இதனிடையே, ஆப்கானிஸ்தானின் டோகஸா மலைப்பகுதி மீதும், வாக்ரம் நகரின் மீதும் - நேற்றுமுன்தினம் இரவு முதல் அமெரிக்க விமானங்கள் தீவிர குண்டுவீச்சை மேற்கொண்டன. இதில் தலிபான்களின் டாங்கிகளும், விமான எதிர்ப்புப் பீரங்கிகளும் நாசமாக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

சமன்கான் மாகாணத்தில் நேற்று அமெரிக்க விமானங்கள் வீசிய குண்டுகளில் சில, இலக்குத் தவறி குடியிருப்புப் பகுதிகள் மீதும், செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினரின் பண்டகசாலைகள் மீதும் விழுந்து வெடித்துள்ளதாகத் தலிபான்கள் அறிவித்துள்ளனர். (ஒ)

## பாக்.பழங்குடியினர் ஆப்கான் பயணம்

இஸ்லாமாபாத்,ஒக்.29

அமெரிக்காவுக்கு எதிரான போரில், தலிபான்களுக்கு உதவுவதற்காக ஆயிரக்கணக்கான பாகிஸ்தானியப் பழங்குடியினர் நேற்றுமுன்தினம் எல்லை தாண்டி ஆப்கானிஸ்தானுக்குள் நுழைந்தனர்.

துப்பாக்கிகள், ரொக்கெட்டுகள், விமான எதிர்ப்புப் பீரங்கிகள் ஆகியவற்றுடன் பஸ்களிலும், லொறிகளிலும் எல்லை தாண்டி பாகிஸ்தானியப் பழங்குடியினர் சென்றதாக நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர். (ஒ)

## பின்லேடனின் சகா பொஸ்னியாவில் கைது!

பொஸ்னியாவில் அமைதி காக்கும் பணிகளில் ஈடுபட்டுள்ள 'நேட்டோ' படைகள் அங்கு ஒஸாமா பின்லேடனின் கூட்டாளி ஒருவரைக் கைது செய்துள்ளதாகக் கூறப்படுகிறது.

பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபடும் பலரை சந்தேகத்தின்பேரில் பொஸ்னியாவில் கடந்த சில வாரங்களில் நேட்டோ படை கைது செய்துள்ளது.

# சோவியத் எதிர்ப்புப் போரின் கதாநாயகன் தளபதி அப்துல்ஹக்

ஆப்கானிஸ்தானில் தலிபான்களின் அரசு அகற்றப்பட்ட பின்னர் பல இன அரசொன்றை அங்கு அமைப்பதில் பிரதான பங்குவகிப்பாரென பரவலாக நம்பப்பட்டவர் தளபதி அப்துல் ஹக் என்று இஸ்லாமிய செய்தி நிறுவனம் வர்ணித்துள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை ஆப்கானிஸ்தானில் வைத்துத் தலிபான்களால் பிடித்துத் தூக்கிலிடப்பட்ட தளபதி அப்துல் ஹக் ஆப்கானிஸ்



தளபதி அப்துல் ஹக் (வலது) தனது வீரர்களுடன் (1992இல் எடுத்த படம்)

தானில் சோவியத் போரின்போது கதாநாயகனாக மதிக்கப்பட்டவர்.

ஆப்கானிஸ்தானில் சோவியத் படைகளுடன் நடந்த 10 ஆண்டுகால மோதலில் முஜாஹிதீன்களுக்கு தளபதியாக இருந்து, இறுதிவரை போராடிய அப்துல் ஹக் இறுதியாக சோவியத் படைகள் அங்கிருந்து அகல காரணமாகவிருந்தார். அப்போது ஆப்கானிஸ்தானில் ஹக் பெரும்புகழைப பெற்றிருந்தார்.

சோவியத் படைகளின் வெளியேற்றத்துக்குப் பிறகு, ஹக் ஐக்கிய அரபு இராச்சியத்துக்குச் சென்று தங்கியிருந்தார். முஜாஹிதீன் அமைப்பிலிருந்து உருவான தலிபான்கள் ஆப்கானிஸ்தானைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த சமயம், அதற்கு எதிராக ஹக் குரல் எழுப்பினார்.

இதனையடுத்து, அவரது மனைவியும், 11 வயது மகனும் வீட்டின் வெளிப்புறத்தில் வைத்து 1999ஆம் ஆண்டு இனம்தெரியாத சிலரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

அதன் பின்னர் ஆப்கானிஸ்தானிய அரசியல் விவகாரங்களில் அக்கறை காட்டாது ஹக் ஒதுங்கியிருந்தார். தலிபான்களை எதிர்த்துவரும் வடக்குக் கூட்டணியினருக்கும் அவர் ஆதரவளிக்கவில்லை.

இந்த நிலையில், ஆப்கானிஸ்தான மீது அமெரிக்கா தாக்குதலை ஆரம்பிக்க நடவடிக்கைகள் மேற்கொண்டபோது, தலிபான்களின் பின்னர், ஆப்கானிஸ்தானில் நிறுவக்கூடிய பல் இன அரசுக்கு ஆணிவேராக அப்துல ஹக்கே முன்நிறுத்தப்பட்டார்.

ஆப்கானின் முன்னாள் மன்னர் மொஹமட் ஜாஹிர் ஷாவை மீண்டும் பதவியிலமர்த்தி, காபூலைத் தலைநகராகக் கொண்ட ஆப்கான் இராச்சியத்தை உருவாக்குவது பற்றி ஹக் எண்ணி வந்ததாக அவருக்கு நெருக்கமானவர்கள் கூறுகின்றனர்.

பி.பி.ஸிக்கு அப்துல் ஹக் சமீபத்தில் அளித்த பேட்டியில், தலிபான்களும், வடக்குக் கூட்டணியினரும் ஆப்கானிஸ்தானை சர்வதேச சமூகத்திடமிருந்து அந்நியப்படுத்திவிட்டதாகவும் - சர்வதேச சமூகத்துடன் ஒத்துழைக்கும்படியான புதிய திட்டம் ஒன்றே ஆப்கான் அரசியலுக்கு அவசியமாகத் தேவை என்றும் - கூறியிருந்தார்.

முன்னாள் மன்னரின் மகன் கூறுகையில், ஆப்கானிஸ்தானின் எதிர்கால நலனுக்காக மீண்டும் ஆயுதமேந்த அப்துல் ஹக் தயாராக இருந்ததாகவும் - ஆயினும் இராஜதந்திர முயற்சிகளில் மட்டுமே ஹக் தற்போது ஈடுபட்டு வந்ததாகவும் - தெரிவித்தார்.

முன்னாள் மன்னரின் அமைதித் திட்டத்துக்கு ஆதரவு திரட்டும் நோக்கத்துடனேயே, பாகிஸ்தான் ஊடாக அப்துல் ஹக் ஆப்கானிஸ்தானுக்குள் சமீபத்தில் நுழைந்திருந்தார்.

அங்கு பழங்குடி இனத் தலைவர்கள் உட்பட பலரையும் சந்தித்து, பல இனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசொன்றை முன்னாள் மன்னரின் தலைமையின் கீழ் உருவாக்கும் நடவடிக்கைகளில் அப்துல் ஹக் ஈடுபட்டிருந்தார்.

தலிபான்களின் மிதவாதிகளும், முன்னாள் முஜாஹிதீன் தளபதிகளும், ஆப்கானிய பிரமுகர்களும் அப்துல் ஹக்கின் முயற்சிக்கு ஆதரவளித்ததாகக் கூறப்படுகிறது.

ஆகவே ஹக்கின் முயற்சி தமக்கு பாதகமான நிலையை உருவாக்கிவிடும் என்பதாலேயே, ஹக்கை தலிபான்கள் கடந்த வெள்ளிக்கிழமை சுற்றிவளைத்துப் பிடித்து பின்னர் தூக்கிலிட்டுக் கொன்றதாகக் கருதப்படுகிறது.

தலிபான்களுக்குப் பதிலாக இஸ்லாமிய உலகுக்கு ஆப்கானின் தலைமைத்துவமாக அடையாளம் காட்டப்பட்ட அப்துல் ஹக்கின் இறப்பு, அமெரிக்காவுக்குப் பேரிழப்பு என்றே ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

அதுமட்டுமன்றி, அமெரிக்கத் தாக்குதலின் மத்தியில் குண்டு வீச்சுகளை சமாளித்து, இரண்டு நாள் முற்றுகையின் பின்னர் தலிபான்கள் ஹக்கை பிடித்தது, அமெரிக்காவுக்கு தலைகுனிவை ஏற்படுத்தியிருப்பதுடன், தலிபான்களைத் தோற்கடிப்பது தொடர்பாக பலத்த சந்தேகத்தையும் கிளப்பியுள்ளதாகவும் ஆய்வாளர்கள் கூறுகின்றனர். (ஒ)



ஆப்கானிஸ்தான் எல்லை அருகே உள்ள சமானில் பாகிஸ்தானிய இராணுவ வீரர் ஒருவர் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ள காட்சி.

## காஷ்மீரில் இடம்பெற்ற

# அமெரிக்காவுக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தில் வன்முறை

ஸ்ரீநகர்,ஒக்.29

ஆப்கானிஸ்தான் மீதான அமெரிக்காவின் தாக்குதலைக் கண்டித்து இந்தியாவின் காஷ்மீர் மாநிலத்தில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டம் ஒன்று வன்முறையில் முடிந்தது.

காஷ்மீரின் கோடைகாலத் தலைநகரான ஸ்ரீநகரில் கடந்த வெள்ளிக்கிழமை வரலாற்றுச் சிறப்புமிக்க ஜாமியா மசூதியில் தொழுகை நடத்திய ஆயிரக்கணக்கான இஸ்லாமியர்கள் தொழுகையின் பின்னர் ஒன்றுகூடி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அப்போது அமெரிக்காவுக்கு எதிராகவும், தலிபான்கள் மற்றும் ஒஸாமா பின்லேடனுக்கு ஆதரவாகவும் அவர்கள் கோஷங்களை எழுப்பினார்கள்.

காஷ்மீரின் பிரிவினைவாதக் கூட்டணியின் முன்னாள் தலைவரான ஜெயலானி இந்த ஆர்ப்பாட்டத்துக்கு ஒழுங்கு செய்திருந்தார்.

ஆர்ப்பாட்டம் நடைபெற்றுக்கொண்டிருந்தபோது, அங்கு குவிந்த பொலீஸாருக்கும், ஆர்ப்பாட்டக்காரர்களுக்குமிடையே திடீரென்று மோதல் ஏற்பட்டது.

இதனையடுத்து பொலீஸார் கண்ணீர்ப்புகைப் பிரயோகம் செய்ததாகவும் -

அதனால் - ஆர்ப்பாட்டக்காரர்கள் கலைந்து சென்றதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

இந்த மோதலில் உயிரிழப்புகள் ஏற்படவில்லை என்று பொலீஸார் தெரிவித்தனர். (ஒ-7)

# தஞ்சமடைவோர் குறித்து பிரிட்டனில் புதிய நடைமுறை

லண்டன்,ஒக்.29

பிரிட்டனுக்குத் தஞ்சம் கோரி வருபவர்கள் தொடர்பாகப் புதிய நடைமுறை ஒன்றை வகுக்க உள்ளதாக பிரிட்டிஷ் அரசு கூறியுள்ளது.

குடிவரவுச் சட்டத்தை மேலும் வலுவாக்கும் வகையில் பிரிட்டனில் அகதி அந்தஸ்து கோரி வருபவர்கள் விசேட வரவேற்பு நிலையங்களில் தடுத்து வைக்கப்படவுள்ளனர்.

மேலும் புகலிடம் தேடிவருபவர்களுக்கு வழங்கப்படும் பணத்தைப் பெறுவதற்கான உறுதிச்சீட்டு உட்பட அகதிகள் தொடர்பாகப் பின்பற்றப்படும் அரசின் கொள்கைகளில் அடுத்தவாரம் பாரிய மாறுதல்கள் செய்யப்படவுள்ளதாக பிரிட்டிஷ் உள்துறை அமைச்சர் டேவிட் [illegible] கூறினார்.

அகதிகளுக்கு வழங்கப்படும் உபகாரப்படி உட்பட பல சலுகைகள் குறைக்கப்படலாம் அல்லது நீக்கப்படலாம் என்று பிரிட்டிஷ் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன. (ஒ-9)

## இந்தியாவின் ஆந்திர மாநிலத்தில்

# மத்திய அமைச்சரின் உறவினரை நக்சலைட்டுகள் கடத்தினர்

ஹைதராபாத்,ஒக்.29

இந்தியாவின் ஆந்திர மாநிலத்தில் மத்திய அமைச்சர் ஒருவரின் உறவினரை 'நக்சலைட்' தீவிரவாதிகள் கடத்திச் சென்றுள்ளனர்.

மத்திய அமைச்சர் வித்தியாசாகர் ராவின் நெருங்கிய உறவினரான மார்த்தாண்ட ராவ் என்பவரை கடந்த வெள்ளிக்கிழமை 10 பேர் அடங்கிய நக்சலைட் கும்பல் ஒன்று கடத்திச் சென்றது.

மார்த்தாண்ட ராவ் மற்றும் அவரது மகன் ஆகியோரைக் கடத்திச் சென்ற நக்சலைட்டுகள், மகனை விடுவித்துவிட்டு தந்தையை தொடர்ந்து தடுத்து வைத்துள்ளனர்.

மார்த்தாண்ட ராவை விடுதலை செய்ய நக்சலைட்டுகள் நேற்று மாலை வரை நிபந்தனைகள் எதனையும் அறிவிக்கவில்லை.

இதேவேளை மார்த்தாண்ட ராவை விடுவிப்பது தொடர்பாக அவரது உறவினர்கள் நக்சலைட்டுகளுடன் தொடர்புகொள்ள முயற்சித்து வருவதாகவும் -

கடத்தப்பட்டவரின் உயிருக்கு ஆபத்தேற்படக்கூடுமென்ற அச்சத்தால் பொலீஸாரை இந்த விவகாரத்தில் தலையிடவேண்டாமென்று உறவினர்கள் கோரியுள்ளதாகவும் - கூறப்படுகிறது. (ஒ)

# 'லொக்கிட் - மாட்டின்' நிறுவனம் ஆயுத விற்பனையில் சாதனை

வாஷிங்ரன்,ஒக்.29

அமெரிக்காவின் ஆயுத உற்பத்தி நிறுவனமான 'லொக்கிட் - மாட்டின்' இதுவரை என்றுமில்லாத வகையில், 40 ஆயிரம் கோடி டொலர்கள் பெறுமதியான யுத்த விமான விற்பனை ஒப்பந்தத்தை பெற்றுள்ளது.

இதன்மூலம் தனக்குப் போட்டி நிறுவனமான 'போயிங்' நிறுவனத்தை 'லொக்கிட் - மாட்டின்' வியாபாரப் போட்டியில் பின்தள்ளியுள்ளது.

இராணுவத் தொழிற்துறையைப் பொறுத்தவரை, இதுவரை காலத்தில் மேற்கொள்ளப்பட்ட விற்பனை ஒப்பந்தங்களில் இந்த ஒப்பந்தம் சாதனை படைத்துள்ளதாகக் கருதப்படுகிறது.

அமெரிக்க விமானப் படைக்காக அடுத்த 25 வருடங்களில் 3 ஆயிரம் கூட்டுத் தாக்குதல் விமானங்களை 'லொக்கிட் - மாட்டின்' நிறுவனத்திடமிருந்து அமெரிக்க அரசு கொள்வனவு செய்வதற்கு இந்த விற்பனை ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

அமெரிக்க பாதுகாப்பு வரலாற்றிலும் கூட, இதுவே மிகப் பெரிய ஒப்பந்தமாகக் கருதப்படுகிறது. மனிதன் ஏறிச் செல்லும் யுத்த விமானங்களில் அதி நவீனமானதாகக் கருதப்படும் சுமார் 10 ஆயிரம் கிலோகிராம் எடையுள்ள கூட்டுத் தாக்குதல் விமானம சுமார் 7 ஆயிரம் கிலோ கிராம்கள் எடையுள்ள வெடிபொருள்களை சுமந்து செல்லக்கூடியது. (ஒ-7)

## சாவகச்சேரி நீதிமன்றங்கள் வதிரியில் இயங்குகின்றன

தென்மராட்சி, ஒக். 29

தென்மராட்சிப் பிரதேச இடம்பெயர்வின் பின்னர் துன்னாலை, தம்பசிட்டி ஆகிய இடங்களில் ஓரளவு இயங்கிவந்த சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றம், நீதிவான் நீதிமன்றம் ஆகியவை தற்போது வதிரியில் உள்ள பருத்தித்துறை நீதிமன்றக் கட்டடத்தின் ஒரு பகுதியில் இயங்கி வருவதாக நீதிமன்றப் பதிவாளர்கள் தெரிவித்தனர்.

சாவகச்சேரி நீதிமன்றில் அவசர, அவசிய சிவில் வழக்குகள் ஏற்கப்படுவதால் அது தொடர்பில் பொதுமக்கள், சட்டத்தரணிகள் தம்முடன் தொடர்பு கொள்ளுமாறு மாவட்ட நீதிமன்றப் பதிவாளர் கந்தையா நாகேந்திரன் அறிவித்திருக்கிறார்.

சாவகச்சேரி நீதிமன்றில் தற்போது நிலுவையிலிருக்கும் வழக்குகள் தொடர்ந்து பருத்தித்துறை நீதிமன்றில் நடவடிக்கைக்கு உட்படுத்தப்படவுள்ளதால் தொடர்புடைய வழக்குகளின் வழக்காளிகள் (வழக்குகளைத்திறந்தவர்கள்) நீதிமன்றுக்குச் சமுகமளிக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

(க-117)

### சுன்னாகம் ஐயனார் கோயில்

## வீதியைத் துரிதமாகத் திருத்தி தருமாறு மக்கள் கோரிக்கை

வலி. வடக்கு. ஒக், 29

நீண்ட காலமாகக் கவனிப்பாரற்றுக் கிடந்த சுன்னாகம் ஐயனார் கோயில் வீதியைத் திருத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த வேலைகளைத் துரிதப்படுத்தி முடிக்குமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சுன்னாகம் காங்கேசன்துறை வீதியில் உள்ள முகாம் ஊடான போக்குவரத்து இரவு ஏழு மணியுடன் தடை செய்யப்பட்டதும் இவ்வீதியூடாகவே மக்கள் தமது பயணத்தை மேற்கொள்கின்றனர்.

மின்சாரம் இல்லாத இவ்வீதியில் திருத்த வேலைகளுக்காக கற்கள் மற்றும் மண் பறிக்கப்பட்டுள்ளமையால் பொதுமக்கள் பெருஞ்சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

இந்த வீதி குண்டும் குழியுமாகக் காணப்படுவதாலும், தற்போது மழைபெய்வதாலும் இரவு நேரங்களில் போக்குவரத்துச் செய்ய முடியாத அவல நிலை ஏற்பட்டுள்ளது. சைக்கிள்களில் செல்வோர் விழுந்து காயங்களுக்கு இலக்காகியும் வருகின்றனர்.

இந்த நிலைமையைக் கவனத்தில் எடுத்து விரைவாக இவ்வீதி திருத்த வேலைகளைப் பூர்த்திசெய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(க-86)

## பருத்தித்துறை நீதிபதியாக நியமனம்

யாழ்ப்பாணம், ஒக். 29

சாவகச்சேரி மாவட்ட நீதிபதியாகவும், நீதிமன்ற நீதிவானாகவும் பணியாற்றிய அ. பிரேம்சங்கர் பருத்தித்துறை மாவட்ட நீதிபதியாகவும், நீதிமன்ற நீதிவானாகவும் நீதிச் சேவை ஆணைக்குழுவினால் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இவர் தொடர்ந்து சாவகச்சேரி பதில் மாவட்ட நீதிபதியாகவும், பதில் நீதிமன்ற நீதிவானாகவும் கடமையாற்றுவாரென நீதிமன்ற வட்டாரங்கள் தெரிவித்தன.

பருத்தித்துறை மாவட்ட நீதிபதியாகவும், நீதிமன்ற நீதிவானாகவும் பணியாற்றிய எஸ். ஏ. ஈ. ஏகநாதன் புத்தளம் மாவட்ட நீதிபதியாக இடம் மாற்றம் பெற்றுச் சென்றதையடுத்து அந்த இடத்திற்கு நீதிவான் அ. பிரேம்சங்கர் நியமனம் பெற்றுள்ளார்.

(க-117)

## சிறுமியின் சங்கிலி அபகரிப்பு

தென்மராட்சி, ஒக். 29

வாணி விழாவுக்குச் சென்ற பத்து வயதுச் சிறுமி அணிந்திருந்த தங்கச் சங்கிலியை சைக்கிளில் வந்த திருடன் அறுத்துக் கொண்டு தப்பியோடிய சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை மாலை துன்னாலைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

(க-117)

## கைதடிப் பகுதியில் 8 பேர் கைது

யாழ்ப்பாணம், ஒக்.29


கைதடிப் பிரதேசத்தில் இராணுவத்தினரால் அனுமதிக்கப்படாத பிரதேசத்திற்குள் அனுமதிப்பத்திரம் (பாஸ்) இல்லாது சென்ற 8 பேர் இராணுவத்தினரால் கடந்த வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டு கோப்பாய் பொலீஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

கோப்பாய்ப் பகுதியில் வசிக்கும் இந்த 8 பேரும் பழைய அலுமினியப்பாத்திரங்களை வாங்குவதற்காக — வியாபார நோக்கில் — அப்பகுதிக்குச் சென்றிருந்ததாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

(க-180)


வெளிவந்து விட்டது! வெளிவந்து விட்டது!

ஒரு காதலின் கதை



அராலியூர் ந. சுந்தரம்பிள்ளையின்

பரிசு பெற்ற நாவல்

182 பக்கங்கள். (94005) ரூபா 150.00


# வட - கிழக்கில் மட்டுமன்றி தெற்கிலும் விதவைகள் எண்ணிக்கை அதிகரிப்பு

## யுத்தமே காரணம் என்கிறார் 'செடேக்' இணைப்பாளர்

யாழ்ப்பாணம், ஒக். 29

வடக்கு—கிழக்கில் வாழும் தமிழ்மக்கள் மத்தியில் மட்டுமன்றி தென்னிலங்கையில் வாழும் சிங்கள மக்கள் மத்தியிலும் விதவைகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. இந்த அவல நிலைக்குக் காரணம் இந்த நாட்டில் தொடர்ந்து கொண்டிருக்கும் கொடிய யுத்தமே.

—இவ்வாறு தெரிவித்திருக்கிறார் 'செடேக்' நிறுவனத்தின் தேசிய உயிர்ப் பூட்டல் குழு இணைப்பாளர் சிசில் பெர்னாண்டோ.

'கியூடெக்' நிறுவனத்தின் ஏற்பாட்டில் அண்மையில் குருநகரில் நடைபெற்ற சமூக விழிப்புணர்வுக் கருத்தரங்கில் கலந்துகொண்டு உரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

திட்டமிடல் இல்லாத, புரிந்துணர்வு அற்ற அரசியல் நடவடிக்கைகளினால் பாதிக்கப்படுவது பாமரமக்களே.

தொடர்புச் சாதனங்களும், அரசியல் வழிகாட்டல்களும் இந்த நாட்டில் நடக்கும் போரை ஒரு கிரிக்கெட் பந்தயமாக நடத்தி பகைமையை வளர்த்து வந்தனவே தவிர, உண்மைகளை வெளிப்படுத்தவில்லை. இதனால் நாட்டில் துவேச மனப்பான்மை வளர்ச்சி பெற்றது.

விதவைகளின் எண்ணிக்கை தமிழ்மக்கள் மத்தியில் மட்டுமல்ல சிங்கள மக்கள் மத்தியிலும் அதிகரித்து வருகிறது.

இதனைத் தடுப்பதற்கும் எமது உறவுகளின் துயரில் நாம் அனைவரும் பங்கெடுத்துக் கொள்வதற்கும் இவ்வாறான உறவாடல் புரிந்துணர்வு செயற்பாடுகளின் மூலம் முயற்சிக்கலாம்.

குருநகர்ப் பங்கில் இன்று நடைபெறும் இந்தக் கருத்தரங்கில் மட்டும் 292 விதவைகள் கலந்துகொண்டிருக்கின்றார்கள் என்பதை நினைக்க மிகவும் வேதனையாகவும், மனதிற்கு நெருடலாகவும் இருக்கின்ற அதேநேரம் பேரதிர்ச்சியையும் ஏற்படுத்துகிறது.

இங்குள்ள உண்மை நிலைகளை தென்பகுதி மக்களுக்கும் எடுத்து விளக்க வேண்டும் — என்றார்.

### 'கியூடெக்' நிறுவன இயக்குநர் உரை

இந்தக் கருத்தரங்கில் தொடர்ந்து உரையாற்றிய 'கியூடெக்' நிறுவன இயக்குநர் அருட்தந்தை சி. ஜி. ஜெயக்குமார் அடிகளார் தமது உரையில்:-

பொய் வாக்குறுதிகளை அளித்து ஏமாற்றும் நிலை தொடர்வதனால் எமது மக்கள் எந்த நிலையிலும் நம்பகத்தன்மை இழந்தவர்களாக இருக்கின்றனர். யாரிடமும் தங்கி வாழாது தன் வருவாயில் தனித்து வாழும் நிலை மக்கள் மத்தியில் ஏற்படுத்துவதற்கு 'கியூடெக்' நிறுவனம் விழிப்புணர்வுப் பணிகளை முன்னெடுக்கின்றது.

இந்தப் பணிகளில் தம்மை இணைத்துள்ள குருநகர் துணையிழந்தோர் மகளிர் அமைப்பினர் தமது துயர்களைப் பகிர்வதோடு மட்டும் நின்றுவிடாது துணிந்து நின்று தமது வாழ்வை வளம்படுத்துவதிலும் உறுதியாக இருக்க வேண்டும்.

இதற்குத் துணைக்கரமாக 'செடேக்' நிறுவனத்தின் விழிப்பூட்டும் பங்களிப்புகள் என்ற நிகழ்ச்சி உள்ளது என்றார்.

இந்த நிகழ்வில் குருநகர் பங்குத் தந்தை அருள்திரு. ஜெயசேகரம் அடிகளார், உயிர்ப்பூட்டல் குழுவின் யாழ். மாவட்ட இணைப்பாளர் ஜோசப்பாலா ஆகியோரும் உரையாற்றினர்.

(க-4)

## குருநகர் ஆலயத்தில் நூல் நிலையம்

குருநகர், ஒக். 29

குருநகர் புனித யாகப்பர் ஆலய மண்டபத்தில் நூல் நிலையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

குருநகரிலுள்ள இளைஞர், யுவதிகள் மற்றும் அங்குள்ள மக்களுடைய வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிப்பதற்காக இந்நூல் நிலையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்நூல் நிலையத்தை ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த ஏனைய நாள்களில் காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை பயன்படுத்தலாம் என குருநகர் பங்குத் தந்தை அருள்திரு. அ. பி. ஜெயசேகரம் அடிகள் தெரிவித்துள்ளார்.

(க-51)

## காலாவதியான குழந்தைகளின் பால்மா பறிமுதல்

தென்மராட்சி, ஒக். 29

ஒரு வருடத்திற்கு முந்திய— விற்பனைத் திகதி காலாவதியான — குழந்தைகளுக்கான பால்மாவை சுகாதாரப் பிரிவினர் கண்டுபிடித்து பறிமுதல் செய்தனர்.

புலோலி வல்லிபுரக் குறிச்சிப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையம்ஒன்றிலேயேபால்மா கண்டுபிடிக்கப்பட்டது. இந்த வர்த்தகர் மீது சுகாதாரப் பகுதியினர் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

இதேவேளை, பருத்தித்துறை நகரப்பகுதியில் உள்ள பேக்கரி ஒன்றின் மீதும் சுகாதாரச் சீர்கேடு காரணமாக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகப் பொதுச்சுகாதாரப் பரிசோதகர் தெரிவித்தார்.

(க-117)

## கையெழுத்து சஞ்சிகை வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், ஒக். 29

யாழ்.தொழில் நுட்பக் கல்லூரியின் பகல்நேர தேசிய ஆங்கில சான்றிதழ் கற்கைநெறி மாணவர்களின் த. நொவீஸ் (The Novice) கையெழுத்து சஞ்சிகை வெளியீட்டு விழா இன்று காலை 10 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் மாணவர் மன்றத் தலைவர் செ. சுபத்திரா தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக கல்லூரி அதிபர் செந்தில்நாதனும், சிறப்பு விருந்தினர்களாக யாழ். உயர் தொழில் நுட்ப நிறுவன பணிப்பாளர் எஸ். இராஜரத்தினமும், கவிஞர் கோ. பத்மநாதனும் கலந்து கொள்வர்.

(க-117)

## வழக்கத்திற்கு மாறானவளமான விமர்சன நூல் 'தூவானம்'

### அறிமுக விழாவில் தலைமையுரை

குருநகர், ஒக். 29

'தூவானம்' நூல் வழக்கத்துக்கு மாறான ஒரு நூல். ஆனால் வளமான — சிறப்பான நூல்.

1989 — 1990 ஆம் ஆண்டுகளில் இங்கு வெளிவந்த திசை வாரப் பத்திரிகையில் 'நீலாம்பரன்' என்ற பெயரில் அ. யேசுராசா எழுதிய பத்தி எழுத்துக்களைக் கொண்டதே இந்த நூலாகும்.

யாழ். திருமறைக்கலாமன்ற கலைத்தூது மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற அ. யேசுராசாவின் 'தூவானம்' நூல் அறிமுக விழாவில் தலைமையுரை நிகழ்த்தியபோது செம்பியன் செல்வன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:-

பத்து ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்ட கட்டுரைகள் புதிதாய்ப் பிறந்தது போல் எங்களுக்குப் புதிய கருத்துக்களையும், புதிய விமர்சனங்களையும் அளித்துக் கொண்டிருக்கின்றனவென்றால் அவை ஆழமானவை, அர்த்தச் செறிவானவை, பயனுடையவை என்ற முடிவுக்கே வரக் கூடியதாக உள்ளது.

நாம் மிக மிக மோசமான கலைகளையும், கலைவடிவங்களையும் ரசித்துக் கொண்டிருக்கிறோம். இதனை மாற்றுவதற்கு சகல ஆளுமைகளையும் கொண்ட சிறுகதைகளில், கவிதைகளில், கட்டுரைகளில், முக்கியமாகத் திரைப்படங்களில் ஆற்றலுள்ள யேசுராசாவின் இந்நூலின் கனதியான கருத்துக்கள் உள்ளன — என்றார்.

விமர்சன உரை நிகழ்த்திய எழுத்தாளர் குப்பிழான் ஐ. சண்முகன் தமதுரையில் தெரிவித்ததாவது:-

உள்ளடக்கம் ஆழமானதாக இருப்பதோடு நூலைப் பார்ப்பவர்களைக் கவர்கின்ற வடிவமைப்போடும் இந்நூல் உள்ளது. நல்ல திரைப்படங்கள் பற்றிய பிரக்ஞையை உருவாக்குவதற்கு இந்தப் புத்தகம் கட்டாயமாக உதவும்.

மேத்தா, கங்கை அமரன் ஆகியோரைப் பலருக்கும் தெரியும். ஆனால் இவர்களுக்கு அப்பால் தான் கவிதை இருக்கிறது. இந்நூலில் இருபது நல்ல கவிஞர்களின் கவிதைகள் மாதிரிக்காகத் தரப்பட்டுள்ளன. யேசுராசாவின் குறிப்புக்களோடு இக்கவிதைகளைப் பார்க்கின்றபோது மேத்தாவையும், கங்கை மரனையும் நீங்கள் மறந்து போவதுடன் சிறந்த கவிதைகளையும் அவைகளை உருவாக்கிய கவிஞர்களையும் இப்புத்தகம் மூலம் அறிந்து கொள்வீர்கள் — என்றார்.

குருநகர் பங்குத் தந்தை அருள்திரு. அ. பி. ஜெயசேகரம் அடிகள், பொன். பூலோகலிங்கம், யாழ். திருமறைக் கலாமன்றத்தின் பொதுச் செயலாளர் ஜோண்சன் ராஜ்குமார் ஆகியோரும் அங்கு விமர்சன உரை நிகழ்த்தினார்கள்.

(க-51)

## யோகாசனக் கண்காட்சி

தும்பளை யோகசாந்தி நிலைய அனுசரணையுடன் யோகாசனக் கண்காட்சி இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு உடுப்பிட்டி அமெரிக்கமிஷன் கல்லூரியில் அதிபர் கி. நடராசா தலைமையில் நடைபெறும்.

(க-109)

# உதயன்

## ஜே.வி.பியின் ஒரு வருடமும் மாவையின் ஆறு மாதமும்

பிரிவினைவாத விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளான தமிழர் விடுதலைக் கூட்டணி, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் ஆகிய வடபகுதிக் கட்சிகளுடன் கேவலமான கூட்டை வைத்திருக்கும் ஐ.தே.கட்சியைத் தோற்கடிப்பதே தங்களது பிரதான பணி என்று ஜே.வி.பி. கூறியிருக்கின்றது.

''தங்களது கட்டுப்பாட்டில் இயங்கும் ஓர் எம்.பிக்கள் குழுவை வடக்கில் இருந்து அனுப்புவதன் மூலம் நாடாளுமன்றத் தீர்மானங்களில் ஆதிக்கம் செலுத்தும் ஓர் இரகசியத் திட்டத்தையும் புலிகள் வைத்திருக்கின்றனர். ஜே.வி.பி. முன்னர் ஏற்படுத்திய 'தகுதிகாண் அரசு' போன்று, அடுத்த அரசையும் 'தகுதிகாண் அரசாக' தங்கள் சார்பு எம்.பிக்களின் கட்டுப்பாட்டில் வைத்திருக்கப் புலிகள் நடவடிக்கை எடுத்திருக்கின்றனர்'' - என்றும் ஜே.வி.பி. குற்றஞ்சாட்டியிருக்கின்றது.

இதேசமயம், புலிகளின் சார்புப் போக்குடையது என்று ஜே.வி.பி. குற்றம் சுமத்தும் தமிழ்க் கட்சிக் கூட்டமைப்பின் சிரேஷ்ட பிரமுகரான மாவை சேனாதிராஜாவும் இனப்பிரச்சினைத் தீர்வு குறித்து ஒரு கருத்தை வெளியிட்டிருக்கின்றார்.

பொதுத் தேர்தலின் பின்னர் புதிதாகப் பதவியேற்கவிருக்கும் அரசு, இனப்பிரச்சினைக்கான தீர்வை முன்வைத்து நடவடிக்கை எடுப்பதற்கு அவர் ஆறுமாதகால அவகாசம் வழங்கியிருக்கின்றார்.

இல்லையேல் நான்கு தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பு பொது மக்களை அணிதிரட்டி அஹிம்சை வழியில் போராட்டங்களை நடத்தும் என்றும் அவர் கூறியிருக்கின்றார்.

நாடாளுமன்றத்தில் இம்மாத முற்பகுதியில் நம்பிக்கையில்லாப் பிரேரணை மூலம் கவிழ்க்கப்படவிருந்த பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசுக்கு, அதற்கு ஒன்றரை மாதங்களுக்கு முன்னர், இதே போன்ற காலஅவகாசத்துடன் ஜே.வி.பி. ஆதரவு வழங்க முன்வந்திருந்தது குறிப்பிடத்தக்கது. அந்த அரசு தகுதிகாண் அரசாக ஒரு வருட காலம் ஆட்சியைத் தொடர்வதற்கு ஆதரவளிக்க அப்போது ஜே.வி.பி. முன்வந்தது. அதாவது ஆட்சி லகானைத் தனது கட்டுப்பாட்டில் வைத்துக்கொண்டு, அரசைத் தொடர்வதற்கு ஒரு வருடம் காலக்கெடு வழங்கியது ஜே.வி.பி.

இப்போது மாவை சேனாதிராஜா அமையப்போகும் புதிய அரசுக்கு ஆறுமாத காலக்கெடு வழங்குகின்றார்.

அது தகுதிகாண் அரசு என்பது போன்ற அடிப்படையில் இருக்கப் போகின்றது என்று சீறிப் பாய்கின்றது ஜே.வி.பி.

அந்தச் சீற்றத்தின் பின்னணியில் இருக்கும் காரணங்களைப் புரிந்து கொள்ளமுடிகின்றது.

ஜே.வி.பி.யின் சிங்கள தீவிரவாதம், புலிகளுடன் பேச்சு மூலம் இணக்கம் கண்டு சமாதானத் தீர்வு எட்டப்படுவதில் அந்தப் பேரினவாதப் போக்குக்கு உள்ள கசப்பு, ஒரு வருட காலம் ஆட்சியைத் தனது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்காக திட்டமிட்டு கட்டியெழுப்பப்பட்ட நடவடிக்கைகள் செல்லாக் காசாகிப் போனமை, குறுக்கு வழியில் பெரும்பான்மை சிங்களவரின் ஆதரவைப் பெற்றுக்கொள்வதற்கு தீவிரப் பேரினவாதப் போக்கே உதவும் என்ற அக் கட்சியின் நடவடிக்கை... இப்படி அதன் கோபத்திற்கு - சீற்றத்திற்கு பல காரணங்கள்.

எது எப்படி என்றாலும், இது விடயத்தில் சிங்களப் பேரினவாதத்துக்கு இன உணர்வின் அடிப்படையில் சீற்றம் எழும்போது -

அதே விடயத்தில் இன உணர்வின் அடிப்படையில் தமிழ் மக்களுக்கு பொறுப்புணர்வாவது ஏற்பட வேண்டாமா?

ஒற்றுமையுடன் செயற்பட்டு, வெறும் சலுகைகளுக்காக அல்லாமல், உரிமைகளுக்காக பெரும்பான்மைச் சிங்களத் தலைமையுடன் மல்லுக் கட்டக்கூடிய பிரதிநிதிகளைக் கூட்டாக நாடாளுமன்றத்துக்கு அனுப்புவதில்தான் தமிழரின் திறமை தங்கியுள்ளது.

# அமரர் ஸ்ரீபாஸ்கரனின் சிலை புதனன்று மல்லாகத்தில் திறப்பு

வலி.வடக்கு,ஒக்.29

முன்னாள் வலி.வடக்கு பிரதேச சபைத் தலைவரும் மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவருமான அமரர் சு.ஸ்ரீபாஸ்கரனின் உருவச் சிலை திறப்புவிழா நாளைமறுதினம் புதன்கிழமை காலை 10.00 மணிக்கு தலைவர் மு.அருளையா தலைமையில் மல்லாகம் கிராம முன்னேற்றச் சங்க முன்றிலில் இடம்பெறவுள்ளது.

பிரதமவிருந்தினராக தமிழர் விடுதலைக் கூட்டணி உபதலைவர் வீ.ஆனந்தசங்கரியும், சிறப்புவிருந்தினர்களாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத துணைவேந்தர் பொ.பாலசுந்தரம் பிள்ளை, யாழ்.மேலதிக அரசாங்க அதிபர் து.வைத்திலிங்கம், வலி.வடக்கு பிரதேச செயலாளர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம்போல், யாழ்.பல்கலைக்கழக வரலாற்றுத் துறைத் தலைவர் பேராசிரியர் சி.க.சிற்றம்பலம், சட்டத்தரணி ப.சபாநாதன், வலி.வடக்கு பிரதேச சபை உபதலைவர் வி.சண்முகநாதன், செயலாளர் பொ.வைரமுத்து ஆகியோரும் -

கௌரவ விருந்தினர்களாக யாழ்.மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, சி.சிவமகாராசா மற்றும் யாழ்.மாநகர முதல்வர் ந.ரவிராஜ் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (ஐ-86)

## கேதார கௌரி விரத மகிமை நூல்

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானத்தில் நடைபெற்றுவரும் கேதார கௌரி விரதத்தை ஒட்டி 'கேதார கௌரி நோன்பும் வரலாறும்' என்ற நூல் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தான தலைவர் துர்க்கா துரந்தரி கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி இந்நூலை எழுதியுள்ளார்.

இந்நூலில் நவராத்திரியின் மகத்துவமும் இடம்பெற்றுள்ளன. (ஐ-86)

# நாட்டு நடப்பு

## மாண்டாள் மங்கை

மார்பகத்துள் கடிதத்தை மறைத்துவைத்து
மனதினிலே மாபெரும் கோட்டைகட்டி
ஆரும் அறியாமல் ஆரணங்கு
ஆனந்தக் களிப்பினிலே தூங்கிவிட்டாள்
கண்டெடுத்தான் காதல் கடிதம்தன்னை
கத்தினான் தந்தை ஆவேசத்தோடு
என்னடி! பாதகி! செய்தாயென்றான்
இவனோ சாதியிலே தாழ்ந்தவன்
என் உயிர் உள்ள மட்டும்மிந்த
இழி சாதியானை ஏற்கேனென்றான்
எண்ணத்தில் பேரிடி விழுந்திடவே
எட்டலரிகொட்டையுண்டு மாண்டாள் மங்கை.

*- விகடகவி.*

### செய்தியாளர் மாநாட்டில் விநாயகமூர்த்தி தெரிவிப்பு:

# புலிகளே தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகள் அவர்களுடன் பேசியே தீர்வு காண முடியும்!

## தேர்தல் மூலம் இதை உலகத்துக்கு உணர்த்துவதே எமது நோக்கம்

யாழ்ப்பாணம்,ஒக்.29

தமிழீழ விடுதலைப் புலிகளே தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகள். அவர்களுடன் மட்டும் பேச்சு நடத்துவதன் மூலமே தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முடியும். இதை உலகத்துக்கும், அரசாங்கத்துக்கும், பேரினவாதக் கட்சிகளுக்கும் பொதுத் தேர்தலின் மூலம் திட்டவட்டமாக எடுத்துக்காட்டுவதற்காகவே நாம் கூட்டுச் சேர்ந்தோம்.

- இவ்வாறு தெரிவித்திருக்கிறார் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான அ.விநாயகமூர்த்தி.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் யாழ்.மாவட்ட வேட்பாளரும் யாழ்.பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவருமான சீ.வி.கே. சிவஞானத்தின் நல்லூர் இல்லத்தில் நேற்றுக் காலை நடத்தப்பட்ட கட்சியின் பத்திரிகையாளர் மாநாட்டிலேயே விநாயகமூர்த்தி இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு விநாயகமூர்த்தி மேலும் தெரிவித்ததாவது:-

பதவிக்கு வரும் அரசாங்கம உடனடியாகப் போர்நிறுத்தம் செய்து பேச்சு மூலம் தீர்வுகாண வேண்டும். அதுவும் விடுதலைப் புலிகளுடன் மட்டுமே பேசவேண்டும் என்பதே எமது திடமான கொள்கை.

தமிழினத்தின் ஏகப்பிரதிநிதிகளான விடுதலைப் புலிகளின் பின்னாலேயே தமிழினம் அணி திரண்டு நிற்கிறது. இவற்றை வலியுறுத்துவதற்காகவே நாம் தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பில் சேர்ந்தோம்.

நாடாளுமன்றக் கதிரைகளைக் கட்டிப்பிடித்துக்கொண்டு இருப்பதற்காகவே நாம் கூட்டுச்சேர்ந்துள்ளதாகச் சிலர் விமர்சிக்கின்றார்கள். அது முற்றிலும் தவறானதாகும்.

இந்தத் தேர்தலில் நாம் நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்படுவதன் மூலம் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளுக்குப் பாதிப்பு ஏற்பட்டால் அல்லது அவர்கள் எம்மைப் பதவி விலகுமாறு கோரினால் உடனடியாக எமது பதவிகளைத் தூக்கியெறிவதற்குத் தயாராகவே இருக்கிறோம். செம்மணி புகழ் அம்மணியுடன் சேர்ந்திருக்கின்ற தமிழ்க்கட்சிகள் தமிழரின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு இதுவரை ஏதாவது உருப்படியான நடவடிக்கை எடுத்திருக்கின்றார்களா?

மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் கொள்கைகளைப் பின்பற்றி அவரது வழியைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதே எமது நோக்கமாகும்.

அரசாங்கம் புலிகளுடன் பேச்சு நடத்தி அவர்களின் அங்கீகாரத்துடனேயே அரசமைப்புத் திருத்தங்களைச் செய்யவேண்டும். விடுதலைப் புலிகளை ஓரங்கட்டிவிட்டு எந்த அரசுடனும் பேசுவதற்கு நாங்கள் தயாரில்லை.

அரசாங்கம் டக்ளஸுக்கு 52 மில்லியன் ரூபா அர்ச்சனைக்குக் கொடுத்துவிட்டு அவர்கள் மூலம் தமிழ் மக்களை அடிமைப்படுத்த முயற்சிக்கிறது. 'றோ' போன்ற வெளிநாட்டு புலனாய்வு அமைப்புகளின் வற்புறுத்தலின் பேரிலேயே தமிழ்க் கட்சிகள் கூட்டுச் சேர்ந்துள்ளன என்று அண்மையில் செய்திகள் வெளியாகியிருந்தன. இவை திட்டமிட்டுப் பரப்பி விடப்படும் முழுப் பொய்யான தகவல்கள் ஆகும். தமிழினத்தின் வேண்டுகோளின் பேரிலேயே நாம் கூட்டுச் சேர்ந்துள்ளோம். தமிழினத்தின் ஒட்டுமொத்த உணர்வுகளின் வெளிப்பாடே எமது கூட்டமைப்பு.

புலிகள்தான் தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் என்பதை வெளிப்படுத்துவதற்கு எமக்குக் கிடைத்த ஒரு நல்ல சந்தர்ப்பமாகவே இதனைக் கருதுகிறோம்.

எமது கூட்டமைப்பில் புளொட்டை இணைக்காதது குறித்து பல கருத்துக்கள் அடிபடுகின்றன. அதுபற்றி இங்கு முழுமையாக கருத்துக் கூறுவதற்கு நான் விரும்பவில்லை.

அரசபடைகளுடன் கூலிப் படைகளாக இணைந்து புளொட் இப்பொழுதும் செயற்பட்டு வருகிறது என்பதே எனது கருத்தாகும்.

- இவ்வாறு கூறினார் விநாயகமூர்த்தி.

### சீ.வி.கே.சிவஞானம்

கட்சியின் யாழ்.மாவட்ட வேட்பாளர் சீ.வி.கே.சிவஞானம் அங்கு தெரிவித்ததாவது:-

தமிழர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு புலிகளுடன் மட்டும்தான் பேசவேண்டும் என்பது தமிழ் மக்கள் மத்தியில் இன்று நேற்று நிலவிய கருத்தல்ல. 1989 ஆம் ஆண்டு இந்திய இராணுவத்தினர் இந்த மண்ணில் நிலைகொண்டிருந்த வேளையே இந்தக் கோட்பாடு தமிழர்களால் முன்வைக்கப்பட்டது.

நாங்கள் எந்தக்கட்சிகளுடனும் போட்டி போட்டுக்கொண்டு தேர்தலில் நிற்கவில்லை. எமது கொள்கைகள், இலட்சியங்கள், நிபந்தனைகள் என்பவற்றை மக்கள் முன் வைத்தே தேர்தலில் நிற்கிறோம். வேறு எந்தக் கட்சிகளுக்கும் நாங்கள் எதிரிகளல்லர். எனவே எமது கொள்கைகளையும் இலட்சியங்களையும் அறிந்து செயற்படவேண்டியது மக்களின் விருப்பம் ஆகும் - என்றார்.



### கஜேந்திரகுமார்

கட்சியின் யாழ்.மாவட்ட வேட்பாளரும் அமரர் குமார் பொன்னம்பலத்தின் புதல்வருமான ஜீ.ஜீ.கஜேந்திரகுமாரும் இந்த செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டார்.

1982ஆம் ஆண்டுக்குப் பின்னர் முதல் தடவையாக யாழ்ப்பாணம் வந்துள்ள அவர் தனது தந்தையின் கொள்கைகளே தமிழர் கூட்டமைப்பின் கொள்கை என்று தெரிவித்தார்.

இந்தத் தேர்தலில் நீங்கள் தோல்வியடைந்தால் அது அமரர் குமார் பொன்னம்பலத்தின் கொள்கைகளை தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என அர்த்தமாகுமா என்று அவரிடம் கேட்டதற்கு -

"இல்லை. அப்படியல்ல. எனது வெற்றி தோல்வி இங்கு முக்கியமல்ல. இந்தக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிடும் அனைவருமே எனது தந்தையின் கொள்கையை ஏற்றுக் கொண்டவர்கள்தான். எனவே அவர்களில் யார் வென்றாலும் அது எனது தந்தையின் கொள்கைக்குக் கிடைத்த வெற்றியாகவே இருக்கும்" - என்றார். (ஐ-4)

# நெல்லியடியில் இன்று சந்தை திறப்பு

வடமராட்சி,ஒக்.29

நெல்லியடியில் புதிதாக அமைக்கப்பட்ட சந்தை திறப்பு விழா இன்று திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு கரவெட்டி பிரதேச சபைத் தலைவர் த.ஜெயராசா தலைமையில் நடைபெறும்.

யாழ். மாவட்ட முன்னாள் ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் கே.வி.குகேந்திரன் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டு சந்தையைத் திறந்து வைப்பார்.

தற்போதைய சந்தை அமைந்துள்ள இடத்தில் ஏற்பட்ட இட, போக்குவரத்து நெருக்கடி காரணமாக கரவெட்டி பிரதேச சபையினால் நெல்லியடி பொலீஸ் நிலையத்துக்கு அருகில் புதிய சந்தை நிர்மாணிக்கப்பட்டுள்ளது. (க-173)

## நாளை

ஐப்பசி 13
செவ்வாய்க்கிழமை
திதி : திரயோதசி
முற்பகல் 9.37 வரை
நட்சத்திரம் : ரேவதி
முழுநாளும்
சுபநேரம் : 10.33 - 12.03
ராகுகாலம் : 3.03 - 4.33
(பழைய நேரப்படி)

## முதியோர் கௌரவிப்பு

வலி.தெற்கு பிரதேச செயலகத்தில் கடந்த புதனன்று நடைபெற்ற முதியோர்தின விழாவில் 30 முதியவர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

இவர்களுக்கு உடுபுடைவைகளும் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

முதியோர் தினத்தை ஒட்டி நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டிகளுக்கான பரிசில்களும் வெற்றி பெற்ற பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்பட்டன. (ஜ-27)

## உதயவாக்கு

அகங்காரத்தை அடியோடு அகற்றியவனுக்கு அனுவளவும் துன்பமில்லை.


## கண்ணிகள் காத்திருக்கின்றன, கவனம்!



இங்கே யுத்தம் நடந்து பல ஆண்டுகள் ஆனாலும்
பனையேறி பாளை சீவி கள் எடுத்துக்கொண்டு
களைப்புடன் இறங்கி நீ நிலத்தில் கால் பதிக்கையில்
வெடித்திடும் பனையடியில் காத்திருந்த மிதிவெடி.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம்
25 ☆ 07 ☆ 1957



மறைவு
29 ☆ 09 ☆ 2001

## அமரர்
# இளையதம்பி கணேசலிங்கம்
## (தேவா)

*(இளையதம்பி அன் சன், ஜெனா மெற்றல் கிறேசர் - சாவகச்சேரி - உரிமையாளரும், "சயந்தன்" லொறி உரிமையாளரும், பிரபல வர்த்தகரும்)*

எழுந்து வருவாயென
ஏக்கமுடன் பார்க்கின்றோம்
புகழுடன் வாழவைப்பாய்
என்றே நாமிருந்தோம்
காலமெல்லாம் உம்நினைவு
கலையாது எம்மைவிட்டு
வேதனையால் நாம் தினமும்
வெதும்பி இங்கு நிற்கின்றோம்
அப்பா உந்தன் திருமுகத்தை
கனவினிலேதான் காண்கின்றோம்
நிஜ உருவில் எம்மிடம் நீர்
விரைந்து வர வேண்டுகின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!*

எமது குடும்பத் தலைவனின் மறைவுச் செய்தி கேட்டு எமது இல்லம் நாடி ஓடிவந்து பலவிதத்திலும் உதவிகள் செய்தோருக்கும், அன்னாரின் இறுதிக்கிரியைகளில் பங்குகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும்,எமக்கு பல வழிகளில் உதவி புரிந்தவர்களுக்கும், வெளிநாடு, உள்நாடுகளிலிருந்து அனுதாபச் செய்திகள் அனுப்பியோருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்று (29.10.2001) திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனைகளிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் வேண்டுகின்றோம்.

*நிரந்தர முகவரி:*
*மட்டுவில் கிழக்கு,*
*சாவகச்சேரி.*

*புன்னாலைக்கட்டுவன் தெற்கு,*
*சுன்னாகம்.*

(93818)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
தாய், சகோதர சகோதரிகள்,
மாமன், மாமி, மைத்துனர்மார், மைத்துனிகள், நண்பர்கள்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

சங்கரத்தை பத்திரகாளி அம்பாள் கும்பாபிஷேக பூர்த்தியின்போது நிகழ்வுகளை நிறைவு செய்த எங்கள் சிவாச்சாரியர்

**சிவஸ்ரீ சு.சுந்தரராசக் குருக்கள்**

*(வழக்கம்பரை அம்பாள் ஆலய குரு)*

அவர்களைக் கௌரவித்து நடத்திய வைபவத்தில் ஆலய அறங்காவலர், வழிபடுவோர்கள் யாவரதும் சார்பாக, சுன்னாகம் கதிரமலை சிவன் தேவஸ்தான பிரதம சிவாச்சாரியர் **பிரம்மஸ்ரீ நா.சர்வேஸ்வரக் குருக்கள் "ஆகம கிரிகா பூஜனம்"** என்னும் சிறப்பு விருதை வழங்கிக் கௌரவித்ததைப் பாராட்டி நாமும் மகிழ்ந்து வழக்கம்பரை அம்பாளை வணங்குகின்றோம்.

*வழக்கம்பரை,*
*சுழிபுரம்.* (C/18880) - பஜனைச் சபையினர்.


# இலங்கை விஞ்ஞான சேவையின் பல பதவிகளுக்கு விண்ணப்பம்

இலங்கை விஞ்ஞான சேவையின வகுப்பு II தரம்II இந்கு ஆள்சேர்ப்புச் செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இலங்கை விஞ்ஞான சேவையின் கீழ் உள்ள பல்வேறு திணைக்களங்களில் நிலவும் பலபதவிகளுக்குப் போட்டிப் பரீட்சை மூலம் புதியவர்கள் ஆள்சேர்ப்புச் செய்யப்படவுள்ளனர்.

போட்டிப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்படுபவர்கள் இலங்கையின் சகல பிரதேசங்களிலும் கடமையாற்றுவதற்குத் தயாராகி இருக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சுகாதாரத் திணைக்களம், வளிமண்டலவியல் திணைக்களம், தேசிய நூதனசாலைகள் திணைக்களம் என்பன இவ்வாறு விண்ணப்பம் கோரப்பட்ட திணைக்களங்களில் சிலவாகும்.

இந்த விண்ணப்பம் தொடர்பான மேலதிக விவரங்கள் ஒக்ரோபர் 26ஆம திகதிய அரச வர்த்தமானியில் பிரசுரமாகியுள்ளன. வர்த்தமானியின் பிரதியை யாழ்.கஸ்தூரியார் வீதியில் உள்ள 'அருண்ஸ் ஸ்போட்ஸ் ஸ்பொட்'டில் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம். (க-7)

# தொழில்நுட்பக் கல்லூரிகளின் விரிவுரையாளர் பதவிக்கும் விண்ணப்பம்

யாழ்ப்பாணம் உட்பட நாட்டின் ஏனைய பகுதிகளில் உள்ள தொழில்நுட்பக் கல்லூரிகளில் நிலவும் பகுதி நேர விரிவுரையாளர்கள், போதனாசிரியர்கள் பதவிக்கு ஆள்சேர்ப்பதற்கான (2002ஆம் ஆண்டுக்குரியது) விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மனித வளங்கள் அபிவிருத்தி தொழில்நுட்ப தொழில்கல்வி அமைச்சின் தொழில்நுட்பக் கல்வி பயிற்சித் திணைக்களத்தின் கீழுள்ள தொழில்நுட்பக் கல்லூரிகளின் அதிபர்கள் இந்த விண்ணப்பங்களைக் கோரியுள்ளனர்.

இந்த விண்ணப்பம் தொடர்பான மேலதிக விவரங்கள் ஒக்ரோபர் 26 ஆம் திகதிய அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளன. வர்த்தமானியின் பிரதியை யாழ். கஸ்தூரியார் வீதியில் உள்ள 'அருண்ஸ் ஸ்போட்ஸ் ஸ்பொட்'டில் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம். (க-7)

### மாதாந்த உதவிப் பணம் பெறும் 15 பெண்களுக்கு

# கால்நடை வளர்ப்புக்கென ரூ.10 ஆயிரம் நிதியுதவி

வலிகாமம் கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் மாதாந்த பொதுசன உதவிப் பணம் பெறும் பெண்கள் 15 பேருக்கு கால்நடை வளர்ப்புக்கென தலா 10 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிதி வடக்கு - கிழக்கு சமூக சேவைகள் திணைக்களத்தினால் இனாமாக வழங்கப்பட்டது.

இந்த நிதி உதவி மூலம் பயனாளிகள் சுயதொழில் முயற்சியான கால்நடை வளர்ப்பை மேம்படுத்தமுடியும் என பிரதேச செயலக சமூக சேவை உத்தியோகத்தர் என்.இராசலிங்கம் தெரிவித்தார்.

மேலும் 25 பயனாளிகளுக்கும் இந்த நிதி உதவியை வழங்குவதற்கான ஒழுங்குகள் நடைபெற்று வருவதாகவும் அவர் கூறினார். (க-180)


உ
சிவமயம்
ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம

## லண்டனில் திருமணம்

**அன்புடையீர்!**

நிகழும் சர்வ மங்களகரமான ஸ்ரீ விஷு வருஷ ஐப்பசி மாதம் 13ஆம் நாள் இன்று (29.10.2001) திங்கட்கிழமை திரயோதசி திதியும், உத்தரட்டாதி நட்சத்திரமும் சித்த யோகமும் கூடிய சுபயோக சுபதினத்தன்று பகல் 11.35 மணிமுதல் 1.15 மணிவரையுள்ள மகர லக்கின சுபமுகூர்த்த வேளையில்

கல்வியங்காடு
காலஞ்சென்ற திரு.திருமதி தர்மபாலன் தம்பதிகளின்
கனிஷ்ட புதல்வன் திருநிறை செல்வன்
**ஜெயசீலன்** (ஜெயா)
அவர்களுக்கும்



சாவகச்சேரி
திரு.திருமதி தியாகராசா தம்பதிகளின்
சிரேஷ்ட புதல்வி திருநிறை செல்வி
**பிரதீபா** (சுபா)
அவர்களுக்கும்

தெய்வத் திருவருளை முன்னிட்டு மாங்கல்ய தாரணம் செய்யும் பொருட்டு பெரியோர்களால் நிச்சயிக்கப்பெற்று **லண்டனிலுள்ள மேற்கு ஈலிங், ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் கோயில் திருமண மண்டபத்தில்** திருமணம் (No.5, Chapel Road, West Ealing, W13 9AE. Tel: 02088100835) நடைபெறுகின்றது என்பதை எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

*தங்கள் நல்வரவை நாடும்:*

திரு.திருமதி இராஜேந்திரன் (ஜேர்மனி)
திரு.திருமதி கயிலாயநாதன் (இலங்கை)
திரு.திருமதி யோகராஜா (இலங்கை)
திரு.திருமதி தவசீலன் (ஜேர்மனி)
திரு.திருமதி குணசீலன் (ஜேர்மனி)
செல்வி பவானி (லண்டன்)
திரு.திருமதி தியாகராசா (நோனா) (இலங்கை)
திரு.திருமதி லெச்சுமிகாந்தன் (இலங்கை)
திரு.திருமதி காளிதாஸ் (சுவிஸ்)
திரு.திருமதி கிருஷ்ணபிள்ளை (இலங்கை)
திரு.திருமதி ஜெயகாந்தன் (இத்தாலி)

(இரு வீட்டார் அழைப்பு)

No.11, St.Johns Road, Southall, Middle Sex, UB2, 5AN, U.K.
T.P: 02085716572, 07754606253.

*சபாபதி லேன்,*
*வண்ணார்பண்ணை மேற்கு,*
*யாழ்ப்பாணம்.*

நிரந்தர முகவரி:
*சங்கத்தானை, சாவகச்சேரி.*
தற்போதைய முகவரி:
*12/5, கன்னாதிட்டி லேன்,*
*யாழ்ப்பாணம்.* (93983)



## NSB

உங்கள் குடும்ப வங்கி

**பரிசுதிய சேமிப்புச் சான்றிதழ்கள் - ரிதீரேகா**

ரிதீரேகா (பரிசுதிய சேமிப்புச் சான்றிதழ்களின்) 27ஆவது சீட்டிழுப்பில்

**தேசிய சேமிப்பு வங்கி சுன்னாகம் கிளையில் பரிசுபெற்ற அதிர்ஷ்டசாலிகளின் விவரம்:**

**Rs. 2,000/-**

| | | | | |
|---|---|---|---|---|
| 020 | 4N | 0513 | செல்வன் T.துவாரகன் | உடுவில் |

**Rs. 1,000/-**

| | | | | |
|---|---|---|---|---|
| 016 | 12F | 0195 | செல்வி G.P.செல்வரத்தினம் | வரணி |
| 027 | 12F | 0545 | திரு. S.ஆனந்தேஸ்வரன் | இளவாலை |
| 061 | 3U | 0629 | திருமதி A.கார்மேளம்மா | உடுவில் |
| 003 | 12F | 0113 | திருமதி S.செல்வராஜா | சுன்னாகம் |
| 004 | 12F | 0429 | P.பர்வதராணி | சுன்னாகம் |
| 059 | 5N | 0383 | திரு. S.குருமூர்த்தி | காங்கேசன்துறை |
| 031 | 12F | 0322 | திரு. K.S.சீவரத்தினம் | சுன்னாகம் |
| 097 | 9B | 0549 | செல்வன் T.லக்ஷன் | யாழ்ப்பாணம் |
| 152 | 7U | 0389 | செல்வி T.நிலக்ஷிகா | சித்தன்கேணி |
| 036 | 4N | 0345 | செல்வி Y.அபிராமி | சுன்னாகம் |
| 144 | 12E | 0099 | திரு. G.பிரதீபராஜ் | மல்லாகம் |
| 086 | 12V | 0215 | திரு. V.ரவீந்திரசோதி | மானிப்பாய் |
| 037 | 12F | 0327 | திரு. N.சிவனேசன் | இணுவில் |
| 027 | 12F | 0492 | திரு. S.ஆனந்தேஸ்வரன் | இளவாலை |
| 122 | 2P | 0538 | திரு. S. ஞானச்சந்திரன் | புன்னாலைக்கட்டுவன் |
| 058 | 3U | 0511 | திரு. V.பத்மதேவன் | சுன்னாகம் |
| 039 | 12F | 0534 | திரு. P.M.இராஜசுந்தரம் | சுன்னாகம் |
| 119 | 3K | 0155 | செல்வன் S.ஜோநாதன் | யாழ்ப்பாணம் |

**அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட திகதி: 18.10.2001**

தேசிய சேமிப்பு வங்கி, சுன்னாகம் கிளையில் 'ரிதீரேகா' சான்றிதழ்களை வாங்கி மேலும் அதிர்ஷ்டசாலிகளாகுங்கள்.

(C/18876) தேசிய சேமிப்பு வங்கி, சுன்னாகம்.



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

**யாழ்.மத்திய பஸ் நிலையப் புனரமைப்புக்காக** நிதி ஒதுக்கீடு செய்து பஸ்நிலையத்தைப் புனரமைத்துத் தந்தமைக்காக,



வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ் விவகாரங்கள், இந்து கலாசார அமைச்சரும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமுமாகிய மாண்புமிகு
**கே.என்.டக்ளஸ் தேவானந்தா**
அவர்களுக்கும்,

யாழ்.மாவட்ட பிரதம அமைப்பாளர்
**திரு.கே.வி.குகேந்திரன்** (ஜெகன்)
அவர்களுக்கும்,





நல்லூர் பிரதேச சபைத் தலைவரும், பிரதி அமைப்பாளருமான
**திரு.க.மணிபல்லவராஜன்**
(நிசாந்தன்) அவர்களுக்கும்,

வடபிராந்திய போக்குவரத்துச் சபை ஊழியர் சார்பில் உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்து பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(C/18875) வடபிராந்திய போக்குவரத்துச் சபை ஊழியர்கள்.



## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
1973
-
10
-
22



மறைவு
1999
-
10
-
22

## செல்வி விஜிதா துரைராஜன்

(குட்டி)
திதி:29.10.2001

கதறி அழுதாலும் எம்கவலை தீராதம்மா!
காலங்கள் உள்ளவரை கண்ணீர்தான் எங்களுக்கு;
இனியவளே! உம்மை இதயத்தில் இருத்திவிட்டு
இருளில் தவிக்கின்றோம்! இன்னலில் துடிக்கின்றோம்!!
உதயமே இன்றி உருக்குலைந்து நாம் தவிக்கின்றோம்;
இரண்டாண்டென்ன ஒரு ஜென்மம் போனாலும்
ஓயாது எம் துயரம்!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*மடம்,*
*ஆஸ்பத்திரி வீதி,*
*சங்கானை.* (93810)

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

## சின்னஞ்சிறு விளம்பரம்

### கணக்கீடு

உயர்தரப் பிரிவுகளுக்கான வகுப்புகள் குழுவாகவும், தனித்தும் பிரபல ஆசிரியரால் கற்பிக்கப்படும். தொடர்பு: 46, Temple Road (IBSஇற்கு அருகில்), யாழ்ப்பாணம். பி.ப. 3.00 மணிக்குப் பின். (93971)

### மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த இளைப்பாறிய உதவிக் கல்விப் பணிப்பாளர் தனது மகனுக்கு பட்டதாரி மணமகளைத் தேடுகின்றார். மகன் 1969 மார்ச், நோர்வே வதிவிட உரிமை, **M.Sc.Computer Engineering** - தொடர்பு: ச.பாஸ்கரன், 16, உடையார் ஒழுங்கை, பழம் றோட், கந்தர்மடம். (93980)

### விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள HONDA-C50 (LANCER) மொடல் மோட்டார் சைக்கிள் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ம.சிற்றம்பலம் (சேவையர்), 'சாந்தபுரி', மயிலணி, சுன்னாகம். (93999)

### இறைச்சிக்கோழி விற்பனைக்கு

புறொயிலர் இறைச்சிக்கோழி விற்பனைக்கு உண்டு. இலவசமாகச் சுத்தம் செய்து கொடுக்கப்படும். Y.A. சுரேஸ், கிராமக் கோட்டடி, எரிபொருள் நிலைய முன் வீதி (100 மீற்றர் உள்), பருத்தித்துறை. (93881)

### SPOKEN ENGLISH

ஆங்கிலத்தில் எழுத, வாசிக்க, இலக்கணம், கதைக்கப் பயில அடிப்படையில் இருந்து, வகுப்பில் 10 மாணவர்கள் மட்டும், வார இறுதி, மாலை வகுப்புகள். ந.விக்னேஸ்வரன் ஆச்சாரி, 426 (302), காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (93993)

## நிதி ஒதுக்கீடு

வலி.கிழக்கு,ஒக்.29

கோப்பாய் கல்விக் கோட்டத்தில் உள்ள 5 பாடசாலைகளுக்கு புதிய கட்டடம் அமைக்கவென வடக்கு - கிழக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சினால் 24 லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இதற்கான வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## பொன்னாடை போர்த்து பாராட்டி வாழ்த்துகின்றோம்

### திரு.சின்னப்பொடி இரத்தினசுவாமி




(ஓய்வூதியர் - பிரதம இலிகிதர் - பொலீஸ் திணைக்களம், கொழும்பு)

அகதிகள் புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் சமூகத்துறையிலும் பல வருடங்களாக மக்களுக்குச் சேவையாற்றி வரும் திரு. சின்னப்பொடி இரத்தினசுவாமி அவர்கள் அகில இலங்கை சமாதான நீதிவான் (J.P. Whole Island) பதவியேற்றதையிட்டு அவரை மனமுவந்து கௌரவித்துப் பாராட்டுவதுடன், அவர் மேலும் பல சிறப்புக்கள் பெற்று நீடூழி வாழ அருள்புரிய வேண்டுமென இறைவனை வேண்டுகிறோம்.

**நிர்வாகிகள்**
அச்சுவேலி கலைமகள் சனசமூக நிலையம்,
நெல்லி வைரவர் ஆலயம்,
அச்சுவேலி தெற்கு.

(94004)

## பாராட்டுதலும் நன்றியும்



முகமாலை, எழுதுமட்டுவாழைச் சேர்ந்த

### செல்வன் அழகையா நிருபன்

2001 - ஐந்தாந்தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் 138 புள்ளிகளைப் பெற்று பளைக் கல்விக் கோட்டத்தில் முதலாவது இடத்தையும், கிளிநொச்சி மாவட்டத்தில் 25 ஆவது இடத்தையும பெற்று சித்தியடைந்தமையையிட்டு எமது பாராட்டுகளைத் தெரிவிப்பதுடன் இவருக்கு ஆரம்பக் கல்வியைப் புகட்டிய முகமாலை றோ.க.த.க. பாடசாலை அதிபர், ஆசிரியர்களுக்கும், இடம்பெயர்ந்த நிலையில் விடாமுயற்சியுடன் அவரது கல்வியைத் தொடர்வித்த துன்னாலை மேற்கு மெ.மி.த.க. பாடசாலை அதிபர், ஆசிரியர்களுக்கும், சிறப்பாக துன்னாலை டால்ரன் கல்வி நிறுவனத்தினருக்கும், பரீட்சைக்கு விண்ணப்பிக்க தாமாக முன்வந்து உதவிய இயக்கச்சி அ.த.க. பாடசாலை அதிபர் அவர்களுக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

செல்வன் அ.நிலோஜன்,
ஆண்டு 6C,
யாழ். மத்திய கல்லூரி.

(C-18888)

## கொக்குவில் இந்துக் கல்லூரி
## பரிசளிப்பு விழா - 2001

காலம் : நாளை (30-10-2001) செவ்வாய்க்கிழமை
மு.ப.10.00மணி

இடம் : கல்லூரி பிரதான மண்டபம்

தலைவர் : திரு.பொ.கமலநாதன் (அதிபர்)

முதன்மை விருந்தினர்: மேல் நீதிமன்ற நீதிபதி
கௌரவ கே.பி.எஸ்.வரதராஜா
(யாழ்.மேல் நீதிமன்றம்)


பரிசில் வழங்கல்: திருமதி தர்மாம்பிகை வரதராஜா

பெற்றோர், பழையமாணவர், நலன்விரும்பிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கொக்குவில் இந்துக் கல்லூரி.
அதிபர், ஆசிரியர், மாணவர்.

(C-18887)

## சேவைநலன் பாராட்டும் வாழ்த்தும்



### திரு.சித்திரவேல் இராஜேந்திரா

(பிராந்திய மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர், சுகாதார சேவைகள் திணைக்களம் - யாழ்ப்பாணம்)

சுகாதார சேவைகள் திணைக்களத்தில் 37 வருடங்களாக சிறந்த சேவையாற்றி, இன்று(29.10.2001) திங்கள் முதல் தனது சேவையிலிருந்து ஓய்வுபெறும் எமது சங்க உறுப்பினர் திரு. சித்திரவேல் இராஜேந்திரா அவர்களை அவரது ஓய்வுகாலத்தில் சீரும் சிறப்புடனும் இறை அருள்பெற்று பல்லாண்டுகாலம் வாழ்க என பாராட்டி வாழ்த்துகின்றோம்.

ஸ்ரீலங்கா பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சங்கம்,
யாழ்.கிளை - உறுப்பினர்கள்.

(94001)

*குறிப்பு :- மேற்படி பாராட்டு விழா எதிர்வரும் (31.10.2001) புதன்கிழமை, காலை 9.00மணிக்கு யாழ். இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.*

## நெஞ்சம் நிறைய வாழ்த்துகின்றோம்



கடந்த 25 வருடங்களாக வாய்ப்புக்கள் பல கிடைத்தும் எம் இனிய தமிழ் மண்ணை விட்டு அகலாது தான் பிறந்த மண்ணில் -

- சட்டத்துறையில் பிரபல சட்டத்தரணியாகவும், பிரசித்த நொத்தாரிசாகவும், சத்திய ஆணையாளராகவும், சிரேஷ்ட சட்டக்கல்வி விரிவுரையாளராகவும்,
- சிறந்த 'மனித சேவைகளுக்காக' சர்வதேச லயன்ஸ் கழகத் தலைமைப் பீடத்தாலும், அகில இலங்கை ரீதியிலும் பல உயர் விருதுகள் பல தடவைகளில் பெற்றுக்கொண்டதுடன், லயன்ஸ் கழகத்தினால் மாவட்ட ரீதியில பல உயர் பதவிகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்ட சிரேஷ்ட லயன்ஸ் தலைவரும்,
- சிறந்த சமயப் பற்றாளனும்,

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் புகழ் பூத்த பழைய மாணவனுமாகிய
*இந்துவின் மைந்தன்*

### உயர்திரு.பா.தவபாலன் அவர்கள்

நீதி அமைச்சினால் யாழ்ப்பாண மாவட்டத்துக்கான சமாதான நீதிபதியாகவும் உத்தியோகப்பற்றற்ற நீதிவானாகவும் நியமனம் பெற்று அண்மையில் மேன்மை தங்கிய மாவட்ட நீதிபதி உயர்திரு.ந.விக்னராஜா அவர்கள் முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்துகொண்டதையிட்டு அவரை வாழ்த்தி அவர் மேலும் தொடர்ந்து சிறந்த சேவையாற்ற எல்லாம்வல்ல நல்லூர்க் கந்தன் நீண்ட ஆயுளை அவருக்கு வழங்க வேண்டி பாராட்டி வாழ்த்துகின்றோம்.

மு.சண்முகம் குடும்பத்தினர்
*57, மருதடி வீதி,*
*யாழ்ப்பாணம்.*

ச.ச.ஞானப்பிரகாசம் குடும்பத்தினர்
ESSEXL லண்டன்.
ச.தனபாலசிங்கம் குடும்பத்தினர்
இல.4, செட்டித்தெரு, நல்லூர்.

(94003)

### சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

## கிளைக்குழு உறுப்பினர் தெரிவு
## 2001.11.04

மேற்படி சங்கத்தின் சகல கிளைகளுக்குமான கிளைக்குழு உறுப்பினர் தெரிவு ஏற்பாடுகள் 20.10.2001இல் மேற்கொள்ளப்பட்டவிடத்து கீழ்க்குறிப்பிட்ட 08 கிளைகளுக்குமான பொதுச் சபைக் கூட்டங்களுக்கு போதியளவு உறுப்பினர்கள் சமுகமளிக்காத காரணத்தால் தெரிவுகள் எதுவும் இடம்பெறவில்லை.

கூட்டுறவுச் சங்கச் சட்டவிதி 18(1), 18(11) இன்கீழ் பின்வரும் கிளைகளின் பொதுச்சபைக் கூட்டம், கிளைக்குழுக் கூட்டம் ஆகியவற்றை கூட்டி தெரிவுகளை மேற்கொள்வதற்கு கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அவர்களால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனவே அக்கிளைகளில் வாக்களிக்கத் தகுதியுள்ள உறுப்பினர்கள் அனைவரும் அக்கூட்டங்களுக்கு தவறாது சமுகமளிக்கும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

இடம்:- சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைமை அலுவலகம் (அச்சுவேலி)

காலம்:- 2001.11.04 ஞாயிற்றுக்கிழமை

நேரம்:-

| கிளை இல | கிளைகள் | நேரம் |
|---|---|---|
| கிளை இல | 184 நாவற்குழி கொள்வனவு நிலையம் நாவற்குழி விற்பனை நிலையம்; 206 கச்சாய் வீதி | முற்பகல் 10.00மணி |
| கிளை இல | 187 மறவன்புலோ; 194 மாசோவளை | முற்பகல் 11.00மணி |
| கிளை இல | 192 மகிழடி. மட்டுவில் தெற்கு; 197 சாவகச்சேரி தெற்கு | நண்பகல் 12.00மணி |
| கிளை இல | 195 நுணாவில் ஏற்றம்; 185 தச்சன் தோப்பு | பிற்பகல் 01.00 |

நிகழ்ச்சிநிரல்:-
1. தலைவர் உரை
2. கிளைக்குழு உறுப்பினர் தெரிவு
3. கிளை உத்தியோகத்தர் தெரிவு
4. பொதுச்சபை பிரதிநிதிகள் தெரிவு

*சாவகச்சேரி பனை தென்னை வள*
*அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்,*
*அச்சுவேலி.*
26.10.2001

(93887) - செயலாளர்.

# பொதுத் தேர்தலுக்கு முன் பெரும் மறியல் போராட்டம்!

## காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கம் நடத்தும்

யாழ்ப்பாணம், ஒக். 29

காணாமற்போன நூற்றுக் கணக்கானோருக்கு நீதி வழங்குமாறு கேட்டு எதிர்வரும் பொதுத் தேர்தலுக்கு முன்பாக பெரும் மறியற் போராட்டம் ஒன்றை யாழ்ப்பணத்தில் நடத்தப்போவதாகக் கைது செய்யப்பட்டு காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கம் தெரிவித்திருக்கிறது.

பிள்ளைகள், கணவன்மார் காணாமற்போய் வருடங்கள் கடந்துவிட்டன. விசாரணைகள் நடப்பதாகக் கூறி நீண்டகாலம் இழுத்தடிக்கப் பட்டுவிட்டது. இனியும் எங்களை ஏமாற்ற முடியாது. அரசியல்வாதிகளினதும் அரச அதிகாரிகளினதும் வாக்குறுதிகளை மட்டும் நம்பிக்கொண்டு நீண்ட காலத்தைக் கழித்து விட்டோம். இனியும் எம்மால் பொறுக்க முடியாது. நாம் நிவாரணம் கேட்கவில்லை நீதியைத்தான் கேட்கிறோம். ஒன்றுபட்ட விதத்தில் எமது கோரிக்கையை முன்வைப்பதற்காக மீண்டும் ஒருமுறை மறியற் போராட்டத்தில் குதிக்க நாங்கள் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம் — என்று பாதுகாவலர் சங்க உறுப்பினர் ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார். (ஐ-180)

# நல்லூரில் பாதுகாவலர் சங்க கூட்டம்

யாழ்ப்பாணம், ஒக். 29

வட பகுதியில் கைது செய்யப்பட்டு காணாமற் போனோர் பாதுகாவலர் சங்கத்தினால் முன்வைக்கப் பட்ட கோரிக்கைக்கு உரிய பதில் கிடைக்காமையினால் அரச செயலகம் முன் மறியற் போராட்டம் நடத்தத் திகதி நிர்ணயிப்பது தொடர்பான கூட்டம் நாளைமறுதினம் புதன்கிழமை காலை 10 மணிக்கு நல்லூர் ஆலய முன்றிலில் சங்கத் தலைவர் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்தக் கூட்டத்துக்கு காணாமற்போனோரின் உறவினர்கள் மற்றும் பாதுகாவலர் சங்க உறுப்பினர்களைச் சமுகம் தரும்படி சங்கத்தின் செயலாளர் கேட்டுள்ளார். (ஐ-180)

# தென்புலோலியில் கல்விக்கூடத் திறப்புவிழா

வடமராட்சி, ஒக். 29

தென்புலோலி காந்தியூர் சனசமூக நிலையக் கல்விக் கூடத்திறப்பு விழா இன்று திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு நிலையத் தலைவர் க. ஸ்ரீஸ்கந்தராசா தலைமையில் நடைபெறும்.

பருத்தித்துறைப் பிரதேச செயலர் ஆ. சிவசுவாமி பிரதம விருந்தினராகக்கலந்து கொண்டு கல்விக்கூடத்தைத் திறந்து வைப்பார்.

புலம்பெயர்ந்த நாடுகளில் வாழும் இக்கிராமத்தைச் சேர்ந்த இளைஞர்கள் வழங்கிய பத்து லட்சம் ரூபா நிதி மூலம் 5 பரப்புக்காணி கொள்வனவு செய்யப்பட்டு கல்விக் கூடம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. (க-173)

# தொழில்நுட்பக் கல்லூரிகளுக்கான போதனாசிரியர் பதவி பரீட்சை இங்கிருந்துபலர்தோற்றவில்லை!

யாழ்ப்பாணம், ஒக். 29

கொழும்பில் நேற்று நடைபெற்ற தொழில்நுட்பக் கல்லூரிகளின்போதனாசிரியர் பதவிகளுக்கான போட்டிப் பரீட்சைக்கு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பலர் தோற்ற முடியாமற்போனதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் பாதிக்கப்பட்ட விண்ணப்பதாரிகள் பலர் ஒன்று சேர்ந்து தமது ஆட்சேபத்தை தெரிவித்துள்ளனர்.

பரீட்சை நடக்கும் காலம் தொடர்பாக தமக்கு குழப்பமான தகவல்கள் தரப்பட்டதால் உரிய வேளை கொழும்பு சென்று இந்தப் பரீட்சையில் தோற்ற முடியாமற்போனதாக அவர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்தப் பரீட்சையை யாழ்ப்பாணத்தில் நடத்த கொழும்பில் உள்ள அதிகாரிகள் இணக்கம் தெரிவித்தபோதும், அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்றும் பரீட்சார்த்திகள் தரப்பில் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

பரீட்சையில் தோற்ற முடியாமற்போனதால் பாதிக்கப்பட்டோரை மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பது குறித்து ஆராய்வதற்காக இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு யாழ். தொழில்நுட்பக் கல்லூரி பகுதியில் ஒன்று கூடுமாறு ஏற்பாட்டாளர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (ஐ)

# ஓட்டுமடத்தில் மிதி வெடியில் பெண் கால் இழப்பு

யாழ்ப்பாணம், ஒக். 29

இராணுவத்தால் கைவிடப்பட்ட காவலரண் பகுதிக்குள் விறகெடுக்கச் சென்ற இளம் குடும்பப்பெண் ஒருவர் மிதி வெடியில் சிக்குண்டு இடது காலை முழங்காலுக்குக் கீழ் இழந்து படுகாயமடைந்தார்.

யாழ்ப்பாணம் ஓட்டுமடம் பகுதியில் நேற்றுக்காலை இடம்பெற்ற இச்சம்பவத்தில் ஒட்டுமடம், குடியேற்றப் பகுதியைச் சேர்ந்த சதீஸ் குமார் இராஜேஸ்வரி (வயது 22) என்பவரே படுகாயமடைந்தவராவார். இவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஐ-15)

# ஐந்து குழந்தைகளின் தாய் பிரசவத்தின்போது மரணம்

வேலணை ல்ஆஸ்பத்திரியி கர்ப்பிணித் தாய் ஒருவர் நேற்றுக் காலை பிரசவத்தின் போது மரணமானார்.

கமலாதேவி யோகரட்ணம் (வயது 41) என்ற பெண்ணே அதிக இரத்தப் போக்கு மற்றும் வலிப்புக் குணம் காரணமாக மரணமானதா ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

ஏற்கனவே ஐந்து குழந்தைகளுக்குத் தாயான இவர், நேற்று முன்தினம் இரவு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்தார். அவரது குழந்தையும் இறந்தே பிறந்தது.

இந்த மரணம் தொடர்பாக விசாரணை மேற்கொண்ட ஊர்காவற்றுறை மேலதிக நீதிவான் திருமதி இளங்கோவன் சடலங்களை பிரேத பரிசோதனை செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்டார்.

இதனையடுத்து இரு சடலங்களும் ஊர்காவற்றுறை பொலிஸாரால் நேற்று மாலை யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்து வரப்பட்டு ஒப்படைக்கப்பட்டுள்ளன. இந்த இரு சடலங்களும் பிரேத பரிசோதனைகளுக்காக வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளன. (உ-164-6-9)

# ஆசிரியருக்கான கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஒக் 29

தென்மராட்சி கல்வி வலயத்தில் 7 ஆம், 8 ஆம் வகுப்புகளில் உடற்கல்வி போதிக்கும் ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியில் நடைபெறும்.

சம்பந்தப்பட்ட ஆசிரியர்களைக் கருத்தரங்கில் தவறாது கலந்துகொள்ளுமாறு வலயப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (சு)

# பெண் மரணம்

யாழ்ப்பாணம், ஒக். 29

மண்ணெண்ணெய் குடித்ததாகத் தெரிவித்து கடந்த 16 ஆம் திகதி யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு, அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த இளம் பெண் ஒருவர் 11 நாள்களின் பின் நேற்று முன்தினம் அங்கு மரணமானார்.

சுன்னாகம் மயிலங்காட்டைச் சேர்ந்த சுந்தரலிங்கம் வினோதினி (வயது 20) என்பவரே உயிழரிந்தவராவார். (ம-15)

## சண்டிலிப்பாய் தொட்டிலடிப் பகுதியில்

# விழிப்புக்குழு அமைத்து திருட்டை தடுக்குமாறு மக்கள் கோரிக்கை

சண்டிலிப்பாய், ஒக். 29

சண்டிலிப்பாய் தொட்டிலடிப் பகுதியில் அடிக்கடி திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்று வருவதால் இப்பகுதியில் திருட்டுக்களைத் தடுப்பதற்கு விழிப்புக்குழு அமைக்கப்படவேண்டும் என்று இப்பகுதி மக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அண்மையில் தொட்டிலடிச் சந்திக்கு அண்மையில் எரிபொருள் விற்பனை செய்யும் கடை ஒன்றின் பூட்டை இரவு வேளையில் உடைத்து உட்புகுந்த திருடர்கள் அங்கு விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த பெற்றோல், மண்ணெண்ணெய், ஒயில் ஆகியவற்றைத் திருடிச் சென்றுள்ளனர். இப் பகுதியிலுள்ள தேனிப்புளியடி என்ற இடத்திலுள்ள வீட்டு வளவில் கட்டப்பட்டிருந்த மாடு ஒன்றை இரவு வேளையில் திருடிக் கொண்டு போக திருடர்கள் எத்தனித்தபோது நாய்கள் குரைத்த சத்தத்தைக் கேட்டு வீட்டுக்காரரும், அயலவர்களும் ஓடிவரவே திருடர்கள் தமது முயற்சியைக் கைவிட்டுத் தப்பியுள்ளனர்.

இதேவேளை—

அண்மையில் தொட்டிலடிப் பகுதியிலுள்ள வீடொன்றில் இரவு வேளையில் — ஊரடங்குச் சட்ட நேரத்தில் — கூரையைப் பிரித்து உள்ளிறங்கிய திருடர்கள் அங்கிருந்த நகைகள், புடைவைகள் ஆகியவற்றைத் திருடிச் சென்றுள்ளனர். பல வீடுகளில் கோழிகளும் அடிக்கடி திருட்டுப் போவதாகப் புகார் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வாரம் சண்டிலிப்பாய் படை முகாமில் பொறுப்பதிகாரி கூட்டிய கூட்டம் ஒன்றில் கலந்துகொண்ட இப்பகுதி மக்கள் அதிகரித்து வரும் திருட்டுச் சம்பவங்கள் பற்றி எடுத்துக்கூறி விரைவில் இப்பகுதிக்கென தனியான விழிப்புக் குழுவை அமைக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர். (ஐ-135)

# 25 பெண்களுக்கு உதவி

வலி. தெற்கு, ஒக். 29

வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் பிரிவில் குடும்பத் தலைவரை இழந்து விதவைகளாகிக் குடும்பப்பொறுப்பை ஏற்றுள்ள 25 பெண்களுக்கு ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தால் வீடுகள் அமைப்பதற்கு உதவி வழங்கப்பட்டு வருகின்றது.

இப்பிரதேச செயலக பிரிவில் உள்ள 14 கிராம அலுவலர் பிரிவுகளில் இருந்து இப்பெண்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

முதற்கட்ட வேலைகள் பூர்த்தியாகியுள்ள நிலையில் மேற்படி நிறுவனத்தால் ஒவ்வொரு குடும்பத்துக்கும் வீடு அமைத்துக்கொள்ளவென ஒரு லட்சத்து 7 ஆயிரம் ரூபா பெறுமதியுள்ள கட்டடப் பொருள்களும், திறன் தொழிலாளருக்கான கொடுப்பனவாக 18 ஆயிரத்து 750 ரூபாவும் வழங்கப்பட்டு வருகிறது. (க-125)


# கேதாரகௌரி பூசை

இணுவில் பிரதான வீதியில் அமைந்துள்ள சிவன் ஆலயத்தில் தினமும் காலை 9.00 மணி முதல் 10.00 மணி வரை கேதாரகௌரி பூசை நடைபெறுகிறது. விரதம் அனுஷ்டிப்போர் பெயர், நட்சத்திர விவரங்களைப் பதிவுசெய்துகொள்ளவும்.

எதிர்வரும் (14-11-2001) புதன்கிழமை தீபாவளித் தினத்தன்று காலை 9.00 மணிக்கு காப்புநூல் வழங்கப்படும்.

சுபம்!

சிவன் கோயில்,
இணுவில்.
(94014)

சீ. பரமேஸ்வரன்
தர்மகர்த்தா

# கண்ணீர் அஞ்சலி

எமது சக மாணவன் சி. பரதன்
அவர்களின் அன்புத் தாயார்

## திருமதி சிவஞானபிள்ளை மகேஸ்வரி

அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அமரரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போமாக.

H.N.D.A. 3 ஆம் வருட
பகுதிநேர மாணவர்கள்.

உயர் தொழில்நுட்ப நிறுவனம்,
யாழ்ப்பாணம், (94012)

# மரண அறிவித்தல்

## செல்லையா சிவகுமார்

(H. N. B. கொழும்பு)

தோப்பு, அச்சுவேலி, ஆஸ்பத்திரி வீதியைப் பிறப்பிடமாகவும் கொழும்பு, வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா சிவகுமார் 27-10-2001 சனிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் செல்லையா (ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் I.O.B), இராசமணி தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வனும், சிறீரஞ்சனாவின் அன்புக் கணவரும், அர்ச்சுதன், அர்ச்சனா, சகீரா ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவனேஸ்வரி (லண்டன்), கணேசராசா (லண்டன்), செல்வதாஸ் (லண்டன்), சரஸ்வதி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், கனகசுந்தரம் (லண்டன்), இலட்சுமி (லண்டன்), அமிர்தா (லண்டன்), விவேகானந்தராசா (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், சின்னத்துரை (கணக்காளர், பூராகத்தி அன் கோ.), கமலா, காலஞ்சென்ற இராசா மற்றும் மீனா தம்பதியினரின் அன்புப் பெறாமகனும், தில்லைராசா (கணக்காளர், உலக வங்கி—அமெரிக்கா), இராசம்மா, காலஞ்சென்ற சின்னத்துரை மற்றும் பத்மாவதி, கனகசபை தம்பதியினரின் பாசமிகு மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 71, மனிங்பிளேஸ், வெள்ளவத்தை, கொழும்பு - 6 இல் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
வ. செல்லையா
(தந்தை)

ஆஸ்பத்திரி வீதி, தோப்பு,
அச்சுவேலி. (94016)

## இடம்பெயர்ந்த மக்களுக்கான

# நிவாரண விநியோகத்தின்போது திடீர்ச் சோதனைகளுக்கு பணிப்பு

அரியாலை,ஒக்.29

இடம்பெயர்ந்த மக்களுக்கான உலர் உணவு நிவாரண விநியோகத தின் போது திடீர்ப் பரிசோதனை களை மேற்கொள்ளுமாறு மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணை யாளர் க.சண்முகநாதன் தமது திணைக்கள கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்குப் பணிப் புரை விடுத்துள்ளார்.

குடாநாட்டில் உள்ள ப.நோ.கூ. சங்கங்களின் கிளைகள் ஊடாக மக்களுக்கு வழங்கப்பட்டுவரும் நிவா ரண விநியோகத்தில் ஏற்படும் முறை கேடுகளைத் தவிர்க்கும்முகமாகவே திடீர்ச் சோதனைகள் இடம்பெற உள்ளதாகவும் அவர் அறிவித்துள் ளார்.

இந்தச் சோதனை நடவடிக்கை யின் போது 'இடம்பெயர்ந்த மக்க ளின் உணவு முத்திரையை அல் லது நிவாரணப் பட்டியலை கிளை முகாமையாளர் சரியாக உறுதிப் படுத்தி நிவாரணப் பொருள்களை உரியவருக்கு வழங்குதல் மற்றும் நிவாரணத்துக்கு வழங்கப்பட்ட பொருள்களின் நிறை, அளவுகள் என்பன சிட்டையின் அடிப்படையில் வழங்குதல் என்பன கவனத்தில் கொள்ளப்படும் என்றும் - அறிவிக் கப்பட்டுள்ளது. (க-17)


அம்பாள் துணை

வியாபாரிமூலை

அருள்மிகு

ஸ்ரீ பத்திரகாளிதேவி சமேத வீரபத்திரசுவாமி ஆலயத்தில்

**கேதாரகௌரி காப்பு**

ஆரம்பம : கடந்த 25.10.2001 வியாழக்கிழமை

எதிர்வரும் 14.11.2001 புதன்கிழமை காலை 10 மணிக்கு அபிஷேகமும் பூசையும். உற்சவத்தைத் தொடர்ந்து கௌரிக்காப்பு நூல் வழங்கப்படும். தினமும் கௌரி நோன்புக் கதை படிக்கப்படும்.

பிரம்மஸ்ரீ சி.வாசுதேவக்குருக்கள்
ஆலய பிரதமகுரு.

(94009)



**நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்**

அல்வாய் வடமேற்கு

**இளம்பிறை சனசமூக நிலையம்**

பன்முகப்படுத்தப்பட்ட வரவு – செலவுத்திட்டத்தில் எமது நிலையத்துக்கென ரூபா ஐந்து லட்சம் ஒதுக் கீடு செய்து, உடனடியாக எமது கையில் ரூபா இரண்டு லட்சம் தந்து வேலையினைத் துரிதமாக ஆரம்பிக்க உதவிய பெருந்தகையாளர்களான,



மாண்புமிகு அமைச்சர்
கே.என்.டக்ளஸ் தேவானந்தா
அவர்களையும்



யாழ்.மாவட்ட
ஈ.பி.டி.பி. பிரதம அமைப்பாளரும்
முன்னாள்
நாடாளுமன்ற உறுப்பினருமான
உயர்திரு.
சே.வி.குகேந்திரன் (ஜெகன்)
அவர்களையும்



பருத்தித்துறை
பிரதேச சபைத் தலைவரும்,
வடமராட்சி
ஈ.பி.டி.பி. அமைப்பாளருமான
உயர்திரு. ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன்
அவர்களையும்

நன்றியுடன்
பாராட்டி வாழ்த்துகின்றோம்

இளம்பிறை சனசமூக நிலையம்,
அல்வாய் வட மேற்கு.

(94010)



**31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்**



தோற்றம்
06 - 12 - 1926

மறைவு
29 - 09 - 2001

அமரர் **செல்லையா சின்னையா** (ராமு)

(மருதங்கேணி தெற்கு, தாளையடி)

இன்று (29.10.2001) திங்கட்கிழமை அன்னாரது தற்காலிக இல்லத்தில் நடைபெறவுள்ள அந்தியேட்டி, ஆத்மசாந்தி வைபவம், மதியபோசனம் ஆகியவற்றில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குசையப்பர் வீதி,
புலோலி தெற்கு, புலோலி.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

(94008)


### விக்கிரகம் பிரதிஷ்டை

சுன்னாகம்,ஒக்.29

சுன்னாகம் தெற்கு சிவபூதராயர் ஆலயத்தில் புதிதாக வள்ளி தேவ சேனா சகித சுப்பிரமணியப் பெரு மான் எழுந்தருளி விக்கிரகம் பிர திஷ்டை செய்யப்படவுள்ளது. கனடா வில் வதியும் சி.இராசையா குடும்பத் தினர் இவ்விக்கிரகத்தை அமைத் துக் கொடுத்துள்ளனர்.

இவ்விக்கிரகப் பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகி நடை பெறவுள்ளது. சிவஸ்ரீ கிருஷ்ண சோதீஸ்வரக்குருக்கள் மஹா கும்பாபி ஷேகத்தை நடத்திவைப்பார். முத் தமிழ்க்குருமணி சிவஸ்ரீ நா.சர்வேஸ் வரக்குருக்கள் அருளாசி வழங்கு வார். (ஐ.27)

### 'சன்லைட்' விலை அதிகரிப்புக் குறித்து மக்கள் அதிருப்தி

கொழும்பில் இருந்து கப்பல் மூலம் யாழ்ப்பாணத்திற்கு கொண்டு வரப்படும் சவர்க்கார வகைகளின் விலைகளை வியாபாரிகள் அதிக ரித்து விற்பது குறித்து பொதுமக்கள் கவலை தெரிவித்தனர்.

சவர்க்காரங்களில் குறிப்பிடப்பட் டுள்ள விலையை விட ஒரு ரூபா மேலதிகமாக மொத்த வியாபாரியி னால் கப்பல் கட்டணமாக அறவிடப் படுவதாகவும், சில்லறை வியாபாரி கள் மேலும் மூன்று ரூபா அதிக ரித்து விற்பனை செய்வதாகவும் கூறப்படுகிறது.

குறிப்பாக 'சன்லைட்' சவர்க் காரத்தின் சில்லறை விலை 13 ரூபா 50சதம் என்று மேலுறையில் காணப்படுகிறது. ஆனால் சில்லறை வியாபாரிகள் அதனை 17ரூபா 50 சதமாக விற்பதாகப் பொதுமக்கள் புகார் கூறுகின்றனர். (க-117)

### தமிழர் ஆசிரியர் சங்க கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஒக்.29

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் சகல கிளைச் செயலாளர் களும், சங்கத்தினால் பாடசாலை களுக்கு வழங்கப்பட்ட நிதி சேகரிப்பு உண்டியல்களை சகல பாடசாலை களிலும் இருந்து சேகரித்து நாளை மறுதினம் புதன்கிழமை காலை 10.30 மணிக்கு யாழ்.இந்து மகளிர் கல்லூ ரியில் கொண்டு வந்து ஒப்படைக் குமாறு மாவட்டச் செயலாளர் க.குமார சாமி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அன்று மாவட்டத் தலைவர் தலைமையில் சில முக்கிய விடயங் கள் தொடர்பான கலந்துரையாடல் நடைபெறவிருப்பதால் அதிலும் சகல கிளைச் செயலாளர்களையும், மாவட் டத்தாய்ச் சங்க நிர்வாகிகளையும் கலந்து கொள்ளுமாறும் அவர் மேலும் தெரி வித்துள்ளார். (க)

### புலோலி கிழக்கு பாடசாலை வீதியில் வெள்ளம்

புலோலி கிழக்கு அரசினர் தமிழ்க கலவன் பாடசாலை வீதியில் மழை வெள்ளம் தேங்கி உள்ளது.

இதனால் இப்பகுதியில் நுளம்புத் தொல்லையால், தொற்று நோய்கள் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதுடன் மாணவர்களும் பெரும் அசௌகரியங் களுக்கு உள்ளாகி வருகின்றனர். (க-109)

### ஈச்சமோட்டை மக்கள் சிரமம்

அரியாலை,ஒக்.29

யாழ்ப்பாணம் ஈச்சமோட்டைப் பகுதி யில் உள்ள வாய்க்கால்கள் துப்பு ரவு செய்யப்படாததால் மழை வெள்ளம் கடலுக்கு வழிந்து ஓடாமல் தேங்கி நிற்கின்றது. இதனால் அப்பகுதி மக் கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி யுள்ளனர்.

மறவன்குளத்தில் இருந்து செல் லும் வெள்ள வாய்க்கால்களிலேயே வெள்ளம் தேங்கி நிற்கின்றது.(க-17)

## கல்விச்சாலைக் காட்சிகள்



நவாலி வடக்கு சனசமூக நிலையத் தின் கீழ் இயங்கும் கலைமகள் முன்பள்ளி பாடசாலை விளை யாட்டுப்போட்டியும் பரி சளிப்பு விழாவும் அண் மையில் இடம்பெற்றன.

விளையாட்டு விழா வில் கலந்துகொண்ட பாடசாலை மாணவர் ஒருவர் சத்தியப்பிர மாணம் செய்வதனைப் படத்தில் காணலாம். அருகில் சனசமூக நிலையத் தலைவர் எஸ்.சுதன், ஆசிரியை செல்வி இ.இந்திராணிதேவி ஆகியோர் காணப்படுகின்றனர்.

*(படம்:- வலி.தென்மேற்கு செய்தியாளர்)*



வலி.வடக்கு பிர தேச சபையின்கீழ் இயங்கும் மல்லாகம் முன்பள்ளியின் விளை யாட்டு விழா அண்மை யில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வலி.வடக்கு பிரதேச சபைத் தலை வர் திருமதி பாலாம் பிகை ஸ்ரீபாஸ்கரன், பிரதேச சபையின் முன் னாள் தலைவர் அமரர் சு.ஸ்ரீபாஸ்கரன் ஞாப கார்த்தப் பரிசை வெற்றியீட்டிய மாணவி ஒருவருக்கு வழங்கு வதைப் படத்தில் காணலாம். அருகில் முன்பள்ளி ஆசிரியை செல்வி இ.சின்னப்பு காணப்படுகின்றார்.

*(படம்: வலி.வடக்கு செய்தியாளர்)*



கைதடி குருசாமி வித்தியாலயத்தின் நவராத்திரி நிகழ்வை ஒட்டிய கலைவிழா கடந்த புதனன்று வித்தியாலய பிரார்த்தனை மண்டபத்தில் இடம்பெற்றது. சிறப்புவிருந்தினராகக் கலந்து கொண்டு ஆசிரியர் "சிவத்தமிழ் சொல்லழகர்" ச.லலீசன் சிறப்புரை ஆற்றுவதைப் படத்தில் காணலாம். விழாத் தலைவர் ஆசிரியர் ந.ஜெயரூபன், பாடசாலை அதிபர் க.அரியதாஸ் மற்றும் ஆசிரியர் களும் உள்ளனர். (ஐ)



கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தின் தமிழ்த்தின விழா அண்மையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

விழாவில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் ந.வரதராஜன் மங்கள விளக்கேற்றிவைப்பதைப் படத்தில் காணலாம். அருகில் பாடசாலை உப அதிபர் திருமதி ரி.ஞானப்பிரகாசம், உதவிக் கல்விப் பணிப்பாளர் ஸ்ரீதயாளன் ஆகியோர் காணப்படுகின்றனர்.

*(படம்:அரியாலைச் செய்தியாளர்)*

# தேர்தலில் போட்டியிடுவது ஏன்? வரதராஜப்பெருமாள் விளக்கம்

யாழ்ப்பாணம்,ஒக்.29

எதிர்வரும் பொதுத்தேர்தலில் சுயேச்சைக் குழுவாகப் போட்டியிடும் ஈ.பி.ஆர்.எல்.எவ். (வரதர் அணி) பத்திரிகை அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

தமது கட்சி தேர்தலில் போட்டியிடுவதற்கான காரணத்தை வடக்கு - கிழக்கு முன்னாள் முதலமைச்சர் அ.வரதராஜப்பெருமாள் அந்த அறிக்கையில் விவரித்திருக்கிறார்.

அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:-

எமது கட்சி எதிர்வரும் பொதுத் தேர்தலில் சுயேச்சைக் குழுவாக மட்டக்களப்பு, வன்னி, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் மீன் சின்னத்தில் போட்டியிடுகின்றது.

நாம் ஏன் இம்முறை தேர்தலில் போட்டியிடுகின்றோம், நாம் எத்தகைய விடயங்களை இத்தேர்தலில் முதன்மைப்படுத்துகின்றோம் என்பதை இவ்வறிக்கை மூலம் மக்களுக்குத் தெரிவிக்க விரும்புகின்றோம்.

நாம் தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளையும், அடிப்படை ஜனநாயக உரிமைகளையும் வென்றெடுப்பதற்கு கடந்த கால் நூற்றாண்டாக குரல் எழுப்பியும், தியாகங்கள் பலசெய்து போராடியும் வந்திருக்கின்றோம்.

அதற்காக நூற்றுக்கணக்கான எமது தோழர்களும், ஆதரவாளர்களும் தமது உயிர்களைப் பலி கொடுத்திருக்கிறார்கள். இதயசுத்தியுடன் நாம் மக்களுக்காகவே வாழ்ந்து வந்திருக்கின்றோம். எமது கட்சி சார்பாகத் தேர்தலில் போட்டியிடும் தலைமை வேட்பாளர்களான சுபத்திரன், துரைரத்தினம், சிவம் ஞானதாஸ் ஆகிய ஒவ்வொருவரும் உண்மையுடனும் நேர்மையுடனும் கடந்த 20 ஆண்டுகளுக்கு மேல் மக்களுக்காக தமது வாழ்க்கையை அர்ப்பணித்து வருபவர்கள். அரச படைகளாலும் புலிகளாலும் பல கொடூரமான துன்பங்களுக்கு ஆளானவர்கள். தமிழ் மக்களுக்காகப் பல ஆண்டுகள் சிறைகளில் அடைக்கப்பட்டவர்கள். சித்திரவதைகளுக்கு உள்ளானவர்கள். இத்தனைக்கு மத்தியிலும் மக்களோடு மக்களுக்காக வாழ்ந்து சேவைசெய்து வருபவர்கள

எமது கட்சியின் நிலைப்பாடு வருமாறு:-

✦ தமிழ் மக்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யும் விதமாக அரச அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும்.

✦ தமிமக்கள் மத்தியில் சகோதரப் படுகொலைகள் இல்லாதொழிக்கப்பட்டு, ஜனநாயக சுதந்திர சூழல் உருவாக்கப்பட வேண்டும்.

✦ இனரீதியாக தமிழ்மக்கள் மீது பிரயோகிக்கப்படும் அத்துமீறல்கள், கொடூரங்கள் முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும். வடக்கு - கிழக்கில் நிலவும் இராணுவ இராஜ்ஜியம் இல்லாததாக்கப்பட வேண்டும்.

✦ வடக்கு - கிழக்கில் அழிந்து போன வாழ்வும் வளமும் புதிதாகக் கட்டியெழுப்பப்பட வேண்டும்.

தேர்தலுக்காக நாம் இவற்றைக் கூறவில்லை. இவற்றைத்தான் நாம் நாளும் பொழுதும் வலியுறுத்தி வருகிறோம். எம்மால் முடிந்த அளவுக்கு செயலாற்றி வருகின்றோம். மக்கள் எமக்கு நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்தை வழங்கும் பட்சத்தில் மக்கள் பிரதிநிதிகள் என்ற உரிமையுடன் இக்கோரிக்கைகளை இன்னொரு தளத்திற்கு எடுத்துச்செல்வோம். இந்தியா உட்பட சர்வதேச சமூகத்திடம் அவற்றைத் தெளிவாகவும் உறுதியாகவும் முன்னெடுத்து சர்வதேச அக்கறையை உருவாக்க முடியும்.

நாம் பெறுமானமுள்ள அரசியலையே நடத்துபவர்கள், வரலாற்றில் ஒரு திருப்புமுனையை ஏற்படுத்த மக்களின் அங்கீகாரம் எமக்கு வேண்டும் என்பதே எமது கோரிக்கை.

- இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)


விற்பனைக்கு

கொம்பியூட்டர் Pentium III டொட்மேட்றிக் (Dot matrix) பிரிண்டருடன் விற்பனைக்குண்டு.

வைத்தீஸ்வரன், 462, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P: 2501 (94017)

மலிவு விற்பனை

ஆண்கள், பெண்களுக்கான கைக்கடிகாரங்கள்

மணிக்கூட்டு பற்றறி வகைகள்

கவர் மணிக்கூடுகள்

அஸ்டி எலக்ரோனிக்ஸ்

15, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (C/18889)

ராஜா யாழ்ப்பாணம்

குணால், மோனல், கரன் மற்றும் பலர் நடித்த

பார்வை ஒன்றே போதுமே

தினசரி: 10.30, 2.30 (புதிய நேரம்)

சனி,ஞாயிறு : 10.30, 2.5 (புதிய நேரம்) (C/18719)

நாகம்ஸ் சுன்னாகம்

M.G.R., ஜெயலலிதா, நாகேஷ் நடிக்க

ஆயிரத்தில் ஒருவன்

(ரீஸ்ஸ்)

காட்சிகள்:– 11.00, 2.30 (பு.நே.) (93994)

நிரஞ்சனாஸ் சங்கானை

ராம்கி, ரம்யா கிருஷ்ணன், விவேக் நடித்த

பாளையத்து அம்மன்

தினசரி காட்சிகள்: 11.00, 2.30, 5.30 (பு.நே.) (C-18883)


## திருத்தப்பட்ட யாழ். பஸ் நிலையம் இன்று வைபவரீதியாகத் திறப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.29

புனரமைப்புச் செய்யப்பட்ட யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்தின் திறப்பு விழா இன்று திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கும் 2 மணிக்கும் இடையில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில், யாழ்.மாவட்ட அரச அதிபர் க.சண்முகநாதன் மற்றும் அரசியல் பிரமுகர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

பல லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்ட இந்த பஸ் நிலையத்துக்கான நிதியை வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கின் தமிழ் விவகாரங்கள் அமைச்சு வழங்கியிருந்தது.

கடந்த ஒருமாத காலமாக நடைபெற்றுவந்த திருத்த வேலைகள் காரணமாக யாழ்.முற்றவெளிப் பகுதிக்கு தற்காலிகமாக இடம் மாற்றப்பட்டிருந்த பஸ் நிலையம் இன்று முதல் வழமையான இடத்துக்கு மாறறப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஜ-4)

## நகரில் உணவகத்துக்குள் புகுந்து இளைஞர் கோஷ்டி தாக்குதல்!

### பெண் உட்பட மூவருக்கு வாள் வெட்டு

யாழ்ப்பாணம்,ஒக்.29

யாழ்நகரில் கே.கே.எஸ்.வீதி - மின்சாரநிலைய வீதிச் சந்தியில் அமைந்துள்ள உணவகம் ஒன்றினுள் நேற்று மாலை இடம்பெற்ற அடிதடி ரகளையில் அங்கு பணியாற்றும் பெண் உட்பட மூவர் வாள்வெட்டுக்கு இலக்காகிக் காயமடைந்தனர்.

ஆறு பேரடங்கிய இளைஞர் கோஷ்டி ஒன்று கத்தி மற்றும் வாள் சகிதம் இந்த உணவகத்தினுள் புகுந்து அங்குள்ள அலுமாரிகளை அடித்து நொறுக்கிச் சேதமாக்கி அட்டகாசம் புரிந்ததாகக் கூறப்படுகிறது.

இச்சம்பவத்தின் போது உணவகத்தில் பணிபுரியும் குணரட்னம் சர்மிளா (வயது 25 - கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்), சுப்பிரமணியம் சண்முகானந்தம் (வயது 37 - கொட்டடி) கோபாலப்பிள்ளை கேதீஸ்வரன் (வயது 32 - கொட்டடி) ஆகிய மூவரும் வாள்வெட்டுக்கு இலக்காகிக் காயமடைந்ததாகக் கூறப்படுகிறது.

இவர்கள் மூவரும் யாழ்.ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சைக்கிள் ஒன்றை அடகுவைத்த விவகாரம் தொடர்பாக எழுந்த பிணக்கே இந்த மோதலுக்குக் காரணம் என்று கூறப்படுகிறது. இந்த விவகாரம் தொடர்பாக யாழ்நகரப் பகுதியைச் சேர்ந்த இளைஞர் குழு ஒன்றுக்கும், மேற்படி உணவகத்தின் உரிமையாளருக்கும் இடையே சச்சரவு ஏற்பட்டதாகவும் அறியவந்தது.

இதேவேளை -

இச்சம்பவம் தொடர்பாக இளைஞர்கள் மூவரை யாழ்.பொலீஸார் கைது செய்துள்ளனர். (ஜ-4-6-9)

## யாழ்.கல்வி வலயங்களில் மாணவர் காப்புறுதித் திட்டம்

### விரைவில் நடைமுறைக்கு என்கிறது ஈ.பி.டி.பி.

யாழ்ப்பாணம்,ஒக்.29

யாழ்.மாவட்டத்தில் ஐந்து கல்வி வலயங்களிலும் மாணவர்களுக்கான காப்புறுதித் திட்டம் ஒன்றை அமுல் செய்ய வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

ஈபிடிபியின் யாழ்மாவட்ட அமைப்பாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான கே.வி.குகேந்திரன் (ஜெகன்) இத்தகவலைத் தெரிவித்தார்.

கல்வியிலும், விளையாட்டுத்துறையிலும் ஆர்வமுள்ள மாணவர்களையும் -

வறுமைக்கோட்டுக்குக் கீழ் உள்ள குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களையும் வலய ரீதியாகத் தெரிவு செய்து அவர்களைக் காப்புறுதித் திட்டத்தில் இணைக்க அமைச்சு நிதி வழங்க இருப்பதாகவும் -

இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்துடன் தொடர்புகொண்டு விரைவில் இத்திட்டத்தை அமுல் செய்ய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா துரித நடவடிக்கை எடுத்திருப்பதாகவும் - அவர் தெரிவித்தார். (ஜ-180)


'போரூட்' அனுசரணையுடன் இயங்கும்

வெளிவாரிப் பட்டப்படிப்பு அலகு

தம்பசிட்டி

மேற்படி எமது நிறுவனத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட கணனிப்பிரிவில் M.S.Office பயிற்சிநெறி இன்று 29.10.2001 ஆரம்பமாகின்றது. சேரவிரும்புவோர் உடன் நிறுவனத்துடன் தொடர்புகொள்ளவும்.

குறிப்பு:- I எங்கும் இல்லாத குறைந்த கட்டணம்.

II ஆசிரியர்களுக்கான பிரத்தியேக வகுப்புகள். (94019)


உ

திருமண வாழ்த்து

28.10.2001 ஞாயிற்றுக்கிழமை இல்லறமாம் நல்லறத்தில் இனிதே இணைந்த புதுமணத் தம்பதிகள்



மணமகன் சதீஸ்கரன் (சதீஸ்)

மணமகள் திருமகள் (கவிதா)

ஆகிய இருவரும்

"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது"

எனும் வான்புகழ் வள்ளுவர் வாக்குப்படி அம்பாள் துணையுடன் ஆல்போல் தழைத்து அறுகுபோல் வேரூன்றி பதினாறு பேறும் பெற்றுப் பல்லாண்டு வாழ்க என நாம் மனமார

வாழ்த்துகின்றோம்!

வாழ்க மணமக்கள்!

16, கலட்டி அம்மன் வீதி, யாழ்ப்பாணம். (94015)

திரு.திருமதி வடிவேல் ஜெயவாணி தம்பதிகள்.
திரு.திருமதி பிரதீபன் சாந்தரூபி தம்பதிகள்.

உ

சிவமயம்

திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான விஷு வருஷம் ஐப்பசி மாதம் 12ஆம் நாள் இன்று (29.10.2001) திங்கட்கிழமை உத்தரட்டாதி நட்சத்திரமும், திரயோதசி திதியும், சித்த யோகமும் கூடிய சுபநன்னாளில் மு.ப. 9.45 மணி முதல் 10.32 மணி வரையுள்ள தனு லக்கின சுபமுகூர்த்தவேளையில்,

எமது சிரேஷ்ட புத்திரன் திருவளர் செல்வன் சுரேஸ்குமார் B.Sc.Eng.(Hons) (யாழ்.மாநகரசபை) அவர்களுக்கும்



எமது ஏக புத்திரி திருவளர் செல்வி விதாஷனி அவர்களுக்கும்

திருவருள் துணைகொண்டு சுன்னாகம் முத்துக்கிருஷ்ணர் வீதி, ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் ஆலயத்தில் திருமாங்கல்ய தாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால், அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் குடும்ப சகிதம் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்து, மதியபோசன விருந்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

வரவேற்புபசாரம்: 30.10.2001 பி.ப.மணமகன் இல்லத்திலும், 31.10.2001 பி.ப. மணமகள் இல்லத்திலும் நடைபெறும்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்.

திரு.திருமதி இராசையா
ஐயனார் கோயில் வீதி,
சுன்னாகம்.

திரு.சி.குமரவேல்
(தலைவர், ப.நோ.கூ.ச.சுன்னாகம்)
திருமதி.தி.குமரவேல்
"திருவேரகம்"
முத்துக்கிருஷ்ணர் வீதி, சுன்னாகம்.

(இரு வீட்டார் அழைப்பு) (94011)

ஆறாம் மாத நினைவு



அமரர் நா.சிறீதரன்

(கிருஷ்ணா அப்பளக் கொம்பனி ஸ்தாபகர் - உரிமையாளர்)

ஆறு மாதம் எமை விட்டு
பிரிந்தாலும் உங்கள் நினைவுகள்
எம் நெஞ்சிருக்கும் வரை
நினைவிருக்கும்
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

திருநெல்வேலி.

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள். (94018)

# இரண்டு லட்சத்து 18 ஆயிரம் பேர் வன்னியில் வாக்களிக்கத் தகுதி

வவுனியா,ஒக்.29

வன்னித் தேர்தல் மாவட்டத்தில் ஆறு நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக, பதிவு செய்யப்பட்ட 2 லட்சத்து 18 ஆயிரத்து 681 வாக்காளர்கள் வாக்களிக்கவுள்ளனர்.

வவுனியா மாவட்டத்தில் 94 ஆயிரத்து 853 பேரும் -

மன்னார் மாவட்டத்தில் 70 ஆயிரத்து 850 பேரும் -

முல்லைத்தீவு மாவட்டத்தில் 53 ஆயிரத்து 158 பேரும் -

வாக்களிக்கத் தகுதி பெற்றிருப்பதாக வவுனியா மாவட்டச் செயலகம் அறிவித்துள்ளது.

இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களைச் சேர்ந்தோரும், புலிகள் கட்டுப்பாட்டில் இருக்கும் பகுதிகளைச் சேர்ந்தோரும் இவர்களில் அடங்குவர். (ஐ-164)

## தேர்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படைத்தரப்பும் தயாராகி வருகின்றது.

தேர்தலுக்குச் சரியாக ஒரு வாரத்துக்கு முன்னர் புலிகளின் மாவீரர் வாரமும் வருவது படை வட்டாரங்களில கவலையை ஏற்படுத்தியுள்ளது.

- இப்படி இராணுவ ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். (உ)

## ஹக்கீம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மன்ற உறுப்பினர் ஏ.ஆர்.எம்.ஏ.காதர் ஆகியோர் இந்த வாகன அணியில் ஒரு வாகனத்தில் ஒன்றாகப் பயணம் செய்தனர். எனினும் இச்சம்பவத்தில் அவர்களது வாகனம் சேதமின்றித் தப்பியதாகத் தெரிவிக்கப்பட்டது. அவர்கள் எவருக்கும் காயம் ஏற்படவில்லை.

அவர்களது வாகனத்துக்குப் பின்னால் சென்ற வாகனங்களில் இருந்த பலர் காயங்களுக்கு இலக்காகினர்.

ஹக்கீமும் அவரது குழுவினரும் தேர்தல் பிரசார நடவடிக்கைக்காக கண்டியில் இருந்து நேற்று மாலை கம்பளைக்குச் சென்ற சமயமே அவர்களது வாகன அணி மீது தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது.

அமைச்சர் ஒருவரின் செல்வாக்குப்பெற்ற குண்டர் கும்பல் ஒன்றே இத்தாக்குதலை மேற்கொண்டதாக ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் வட்டாரங்கள் நேற்றிரவு தெரிவித்தன.

## வரதர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றது. இதனால் அவர் அவ்விடத்திலேயே உயிரிழந்தார்.

இச் சம்பவம் தொடர்பாக கல்குடா பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். பலியானவரின் சடலம் வாழைச்சேனை வைத்தியசாலைக்கு எடுததுச்செல்லப்பட்டது. (ஐ-6)

## தேர்தல் கால...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னைக் கூட்டங்களை நடத்தினார்.

இதேவேளை -

தேர்தலை ஒட்டிய வன்செயல் சம்பவங்கள் பெரிய அளவில் இன்னமும் நடைபெறாத போதும் பொலீஸாரின் பாதுகாப்பு ஏற்பாடுகள் அதிகரிக்கப்பட்டிருக்கின்றன.

தலைநகர் கொழும்பில் பொலீஸாருடன் பெரும் எண்ணிக்கையான சீஐடியினரும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

வன்முறைச் சம்பவங்களில் ஈடுபடுவோர் கைதானால் அவர்கள் உடனடியாக விடுதலை செய்யப்படாமல் தடுத்து வைக்கப்படுவார்கள் என்றும் -

தேர்தல் காலத்தில் கொலை மற்றும் கொலை முயற்சிகளில் ஈடுபட்டால் அத்தகையோர் நீதிமன்ற விசாரணைகள் முடிவடையும் வரை விடுவிக்கப்பட மாட்டார்கள் என்றும் - பொலீஸார் தெரிவித்துள்ளனர்.(ஐ-6)


## வாகனகாரர் கவனத்துக்கு!

ஆனைப்பந்தியில் இயங்கிய

[illegible]பண்ணை 'கராஜ்'

நலன் கருதி

*கன்னாதிட்டி மககள் வங்கிக்கு முன்பாக*

இடம்மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இன்று (29.10.2001) திங்கட்கழமை காலை 9.00 மணியில் இருந்து செயற்படத் தொடங்கும் என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றேன்.

*26, புது வீதி,*
*கொய்யாத்தோட்டம்.* (93997) - கராஜ் பெரியண்ணை.

## புதுக்கடைத் திறப்புவிழா அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் விஷு வருஷம் ஐப்பசி மாதம் 12ஆம் நாள் இன்று (29.10.2001) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணிமுதல் 12.45 மணிவரையில் வரும் உத்தரட்டாதி நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய சுபமுகூர்த்தத்தில்

யாழ்ப்பாணம் இல.458, ஆஸ்பத்திரி விதியில்

### ஐடியல் கிறீம் ஹவுஸ்

என்னும் ஸ்தாபனத்தை இறைவன் திருவருளை முன்னிட்டு ஆரம்பித்து நடத்தவுள்ளதால் அத்தருணம் அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரும் குடும்ப சகிதம் வருகை தந்து விழாவைச் சிறப்பிக்கும்வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

458, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

தங்கள் நல்வரவை நாடும்:
திரு.தியாகராஜா கஜன்

இந்த அழைப்பையே தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்று வருகைதரும்வண்ணம் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

## மங்களகரமான திறப்பு விழா

### MILLANS MULTI COMPLEX

நிகழும் விஷு வருடம் ஐப்பசித் திங்கள் 12ஆம் நாள் இன்று (29.10.2001) திங்கட்கிழமை எம்மால் புதிதாக இல.60,கோவில் வீதியில் (பொஸ்கோ பாடசாலைக்கு அருகில்)

### மிலன்ஸ் மல்ரி கொம்பிளக்ஸ்

என்னும் ஸ்தாபனம் மங்களகரமாக ஆரம்பிக்கப்படவுள்ளது என்பதனை அன்பர்கள், நண்பர்கள்,ஆதரவாளர்கள் அனைவருக்கும் மிகவும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம். எனவே தங்களின் ஆதரவைத் தொடர்ந்தும் எதிர்பார்க்கின்றோம்.

*எம்மிடம்:-* 1) Recording Bar, 2) Computer Printing, 3) Internet,Email, 4) Laminating

வசதிகளும் உண்டு.

அனைவரையும் திறப்பு விழாவிற் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

உரிமையாளர்:- சி.ஜி.மக்ஸ்மிலன்,
மின் அஞ்சல்: Milans 28 (@) Yahoo.Co.

60, கோவில் வீதி,
யாழ்ப்பாணம். (93988)

## விளம்பரதாரருக்கு ஒரு நற்செய்தி!

*உதயனில் வெளியாகும் விளம்பரங்களை இனிமேல் நாடு முழுவதும் எட்டக்கூடியதாக 'சுடர் ஒளி' நாளிதழ் மூலமும் பிரசுரிக்கலாம்.*

உதயனில் இடம்பெறும் மரண அறிவித்தல் மற்றும் முக்கிய விளம்பரங்களை இனிமேல் கொழும்பில் வெளியாகும் 'சுடர் ஒளி' நாளிதழிலும் சமகாலத்தில் பிரசுரிக்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

உதயனில் விளம்பரத்தைப் பிரசுரிக்கும்போது மேலதிகமாகச் சிறு தொகையைச் செலுத்துவதன் மூலம் உங்கள் விளம்பரம் 'சுடர் ஒளி' மூலம் நாடு முழுவதும் வாசகர்களை எட்டுவதை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்.

மேலதிக விவரங்களை 'உதயன்' அலுவலகத்தின் விளம்பரப் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம்.

- நிர்வாகத்தினர்.

இன்று
29.10.2001 திங்கட்கிழமை முதல்
'சுடர் ஒளி' நாளிதழாக மலர்கின்றது!

## மங்களகரமான திறப்புவிழா அழைப்பு

### கந்த வேலன் ரேடர்ஸ்

(Paints, Hardwars & Vehicles)

*அன்புடையீர்!*

இன்று (29.10.2001) திங்கட்கிழமை பகல் 9.40 மணி முதல் 11.34மணி வரையில் வரும் சுபவேளையில் "கந்த வேலன் ரேடர்ஸ்" எனும் புதிய ஸ்தாபனம் யாழ்.ஸ்ரான்லி வீதியில் ஆரம்பிக்கப்படவுள்ளதால் அந்நேரம் எமது அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரையும் விழாவுக்கு வருகை தந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்,
உரிமையாளர்:
த.நிறஞ்சன்

*110, ஸ்ரான்லி வீதி,*
*யாழ்ப்பாணம்.* (C/18877)

## தமிழரின் விடிவுக்கு ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் சின்னம்

## சுயேச்சைக் குழு

X

(93902)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 29.10.2001இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.